பதிவு எண் 2041

KUDI ARASU.

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணு | வெளி நாடு 1½ அணு }

# குடி அரசு

வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1-12
வெளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0


வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 3 | ஈரோடு, பிரபவஹு மாசி மீ 14வ (26-2-28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 44

இனும்! இனும்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனு இனும்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனு இனுமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்திரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

10-வருஷ உத்தரவாதம்.



விலை ரூ. 20 முதல் ரூ. 100 வரை

மிக்க உயர்தரமானது. நீடித்து உழைக்கக் கூடிய ஸ்வர சுத்தம், சாரவை, கமக்கம், இனிமையுள்ள நாதம் பொருந்திய ஆர்மோனியங்களும், மற்றுமுள்ள சங்கீதக கருவிகளும் உத்திரவாதத்துடன் குறைந்த விலைக்கு நம்மிடம் கிடைக்கும். முழு விவரங்களடங்கிய கேட்லாக் வேண்டுமானுல் அனுப்பப்படும்.

பழனி கம்பேனி, கல்கத்தா ஆர்மோனியம் ஏஜென்சி 411, தங்கசாலை வீதி, சென்னை.

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனவும் இனும்.




நூதனமாக வரவழைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.
விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்,
3, பார்க் டவுர், (தா) சென்னை.

டேபில் டைம்பீஸ் இனும் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில்வைக்கக்கூடியஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனுமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு ரேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி மதராஸ்.


முன் விலை ரூ. 14 இப்பொழுதரு 7
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்.



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானுலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனுமாய்ச்சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு 3½"x 2½" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லாசாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்.

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.



தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

இனும்! இனும்!!

சாரவிவேகி சதாநந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனுன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனுமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சாது இரத்தினசற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னுரென்று மிகவு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. குமரகம்செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

காலத்திற்கேற்ற நூல்! காதலர்கள் தேடும் நூல்!!

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400-பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம் நேர்த்தியான அச்சு.

நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இந் நூலில், அடங்கியுள்ள விஷயங்கள்.

1. துறவிகளின் கதி யென்ன?
2. இல்வாழ்க்கை ஏன் சிறந்தது?
3. இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி?
4. இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும்பாடு.
5. பெண்ணின் பெருமை, பெண்கல்வி.
6. நாணம் எப்படி உண்டாயிற்று?
7. உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8. நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9. நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன?
10. இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்?
11. ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?
12. காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13. சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?
14. மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15. கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16. தமக்குச்சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது?
17. ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது?
18. அவர்களிடத்தில் அமிர்தநிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19. பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20. சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21. ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22. பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்கு காரணம். இதைப்போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23. மனம் போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24. கருவிலிருப்பது ஆணா பெண்ணா என்று எப்படி அறிந்து கொள்வது?
25. கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்து கொள்ளவேண்டிய முறைகள்.
26. கர்ப்பகாலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக்கூடிய வியாதிகள்.
27. அவைகளை போக்கடிக்கும் உபாயங்கள்.
28. முதல் மாதத்திலிருந்து கடைசிமாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29. ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப்போக்கடிக்கும் விவரம்.
30. புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக்கொள்ளுவதெப்படி?

31. அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ, புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசு கொலை அநியாயம்.

32. ஒருவன் எத்தனை மாதரை மணம் புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்க வேண்டுமானால் அவன் எப்படி சாமார்த்தியமாய் நடந்து கொள்ளவேண்டும்.

33. தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா? தாசிகள் வீடுபோகும் நபர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சில வார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

ஆகையால் நண்பர்களுக்கு நமது வேண்டுகோள் என்னவென்றால் இவ்விளம்பரத்தைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்னும் எமது புதிய நூலின் ஒரு பிரதியை வாங்குவாராக. குடும்பஸ்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இதன் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும். உம்முடைய நண்பர்களிடத்தும் இந்நூலைப் பரப்பி நாட்டிற்கு நன்மைசெய்யுங்கள். இந்நூல் லாபங்கருதி அச்சிட்ட புத்தகமல்ல.

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்ற புத்தகம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள புத்தக வியாபாரியிடமும் கிடைக்கும் அல்லது எங்கள் விலாசத்துக்கு உடனே எழுதவும்.

விலை ரூபாய் 2—0—0.

## வாஸன் புஸ்தகசாலை,

தபாற்பெட்டி நெ. 119

97. அன்னபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.

# பாலிய விவாகத்திற்கு ராமரும் சங்கரரும் சாட்சியா?

கைவல்லிய சாமியார் எழுதுவது.

"குடி அரசு" ராமாயணத்தையும் குற்றம் சொல்லுகிறது என்று சிலர் நினைக்கிறார்கள். 'குடி அரசு' சொல்லுவதைப் படிப்பதோடு மனதை நிறுத்தி விடாமல் ஆலோசித்துப் பார்க்கட்டும். குருட்டு நம்பிக்கையின் மனோபாவத்தில் அலட்சியப் படுத்தினால் அதன் உண்மை விளங்காது. சாஸ்திரத்தின் உள்கருத்தை வெளிப்படுத்த, குருக்களின் கட்டுப்பாட்டினால் அடிமை புகும் மூட நம்பிக்கையை நீக்கி சாஸ்திரத்தின் உண்மை தத்துவததால் உண்டாகும் சமத்துவத்தையும், சுயமரியாதையையுமே சாஸ்திர ஆதாரங்களுடன் சொல்லுகிறது 'குடி அரசு' நம்முடைய எந்த விவகாரங்களுக்கும் சாஸ்திரத்தையும் அதில் சம்மந்தப்பட்ட பெரியவர்களையும் உபமானம் காண்பிப்பது நமக்கு வழக்கமாகவிருக்கிறது. அதையே நாம் கேட்டு வந்திருக்கிறபடியால் நம்மில் படித்த பண்டிதர்கள் 'ராமர் அப்படியிருந்தார், கிருஷ்ணர் இப்படி நடந்தார், நீங்களும் அப்படியே செய்ய வேண்டும்' என்று நம்முடைய முன்னேற்றங்களுக்குத் தடையாகவிருக்கும் காரியங்களில் சொல்லியே வருகிறார்கள். அவர்கள் சொல்லுவதற்கும் சாஸ்திரத்திற்கும் அதில் சம்பந்தப் பட்ட பெரியவர்கட்கும் நம் விவகாரங்களுக்கும் சம்மந்தா சம்மந்தமுண்டா? இவர்கள் சொல்லுகிறபடியே அவர்கள் சரித்திரங்களுமிருக்கிறதா என்கிறதைப் பற்றி ஆராய்ச்சி செய்தவர்கள் மிகச் சொற்பம்: இவ்வித ஆராய்ச்சியின் விவேகமே ஜனசமூகங்களிடம் குறைந்து போய் விட்டது. ஒரு ஜன சமூகம் முன்னுக்கு வரவேண்டுமானால் ஆராய்ச்சியின் அறிவு வேண்டும். இதை உண்டு பண்ணவே 'குடி அரசு' பாடு படுகிறது. பிரயோஜனமற்ற மூடக் கொள்கைகளையும், அதில் சம்மந்தப் பட்ட சாஸ்திரங்களையும் அதைப் பரப்பும் புத்தியையும் 'குடி அரசு' குற்றம் சொல்லி ஜனசமூகங்களின ஆராய்ச்சியை விர்த்திசெய்து ஒவ்வொருவனுக்கும் மதமும், கடவுளும், சாஸ்திரங்களும் பொது வென்று ஜன சமூக விர்த்திற்கோ லோக விவகாரங்களுக்கோ மாறுபட்ட எல்லா சாஸ்திரமும் அதை ஆதாரமாகக் கொண்டவரும் குருவும் அவன் உபதேசிக்கும் கடவுளும் ஒழிய வேண்டுமென்றும் 'குடி அரசு' சொல்லுவது குற்றமுமல்ல, சாஸ்திர விரோதமுமல்ல.

பெண்கள் கல்யாண வயதை உயர்த்த வந்திருக்கும் சட்டத்தைக் கண்டிக்க சிதம்பரத்தில் கூடின கூட்டத்தில் மகாமகோபாத்தியாயரும், ஸமஸ்கிருத பள்ளிக்கூட தலைமை உபாத்தியாயருமான தெண்டபாணி தீட்சதர் (சபைத்தலைவர்) செய்த பிரசங்கத்தில் "ராமன் பன்னிரண்டு வயதில் விவாகம் பண்ணிக்கொள்ள வில்லையா? சங்கரருக்கு அவர்கள் பந்துக்கள் ஏழு வயதில் விவாகம் செய்து வைக்க முற்பட வில்லையா?" என்னும் மேற்கோளால் பாலிய விவாகத்தை ஊர்ஜிதப் படுத்துகிறார். ராமனுக்கு 12 வயதில் கலியாணமானதாக எந்த ராமாயணத்திலுமில்லை. ராமர், சங்கரர் இவர்கள் கதை சாதாரணமாக அநேகருக்குத் தெரியும். சிதம்பரம் படித்தவர்களிருக்குமிடம். வெல்லோரும் படிக்கும் இந்தக் கதையிலேயே பண்டிதர்கள் இல்லாததைகளைச் சொல்லி ஏமாற்றுவதானால் மற்றும் பார்ப்பனர் தவிர வேறு யாரும் படிக்கக்கூடாதான வேதமென்றும், சாஸ்திரமென்றும் அதில் சொல்லியிருக்கிறதென்றும் சொல்லப்படுபவைகளில் எத்தனை புரட்டு இருக்கவேண்டும்? அதை எப்படி நம்புவது? ராமனும் சீதையும் மோகித்து ராத்திரியெல்லாம் தூங்கவில்லை என்று ராமாயணம் சொல்லுகையில் ராமனுக்குப் பன்னிரண்டு வயதென்றும், சீதைக்கு ஏழு வயதென்றும் எப்படிச் சொல்லுவது? எல்லாருக்கும் தெரிந்த கதையில் மகாமகோபாத்தியாயருக்கு இத்தனை மாறுட்டமிருந்தால் நம் நாட்டையும் ஜனசமூகங்களையும் பாழ்படுத்தின இவர்களின் சாஸ்திரங்களையும் இவர்களையும் குற்றம் சொல்லும் 'குடி அரசின்' குற்றமென்ன? ராமரையும் சங்கரரையும் நம் கலியாணங்களுக்கு உபமானம் கூறுவது நியாய விரோதம். அந்தக்காலத்து வரப்பிரசாரத்திற்கும் இந்த காலத்து சட்டதிட்ட அவசியத்திற்கும் பொருந்தாது. பொருத்தமில்லை. தசரதன் அறுபதினாயிரத்து மூன்று பெண்சாதியை உடையவர். பெண்ணின் மோகத்தால் பெண்சாதிக்கு முறை தவறி ராஜ்யத்தைக் கொடுத்தவர். இந்தக்காலத்தில் அந்தமாதிரி ராஜாக்கள் இல்லை. இருக்கவும் முடியாது. வில்லை யார் வளைத்தாலும் சீதையை விவாகம் செய்துகொள்ளலாம் என்றது போன்ற பந்தய சுயம்வரக்கலியாணம் எந்த ராஜாங்கத்திலுமில்லை. தவிர ராமர் விஷ்ணுவின் அவதாரம் என்று சொல்லப்பட்டவர். சீதை பூமியிலிருந்து வந்த பெண் என்று சொல்லப்பட்டவர். இவர்கள் மூன்று வயதிலும் முன்னூறு வயதிலும் கல்யாணம் செய்து கொள்ளலாம். வண்ணான் வார்த்தையால் சீதையை இளையவனுடன் காட்டிற்கு அனுப்ப இளையவனிடம் சீதை தன் கெர்ப்பத்தைத் தெரியப்படுத்த வனத்தில் வால்மீகி தெர்ப்பையால் மற்றொரு பிள்ளையை உண்டுபண்ணின அவர்களின் வாழ்க்கைக்கும் நம் வாழ்க்கைக்கும் எப்படிப் பொருந்தும்.

ராமர் கதையைச் சொல்லுவது ராமாயணம். ராமாயணம் மோக்ஷோபாயமென்று சிலரும் வேதாந்தத்தின் முக்கிய தத்துவமாக மென்று சிலரும் பகவத் சரணாகதி கிரந்த மென்று சிலரும் நினைத்து உபகிரந்தங்களும் வியாக்கியானங்களும் செய்திருப்பதையும் புத்தகங்களில் எழுதி வெளிப்படுத்தாத ரகசியமென்று சில உபதேசங்களுள் குரு சிஷ்ய பரம்பரையாய் வந்துகொண்டிருப்பதையும் நமது பால்ய முதற் கொண்டு மூத்தோர்களிடமிருந்து எட்டிவில்லாத பல கதைகளையும் கேட்டும் படித்தும் இருக்கிறோம். ராமாயணம் அநேக விதப்படும் அவைகளில் ஒரே விஷயத்தை பல விடங்களில் பல விதமாய்ச் சொல்லியிருக்கிறது. கதா பாகங்களும் வேறுபடுகின்றன. கல்பாந்தர ராமாயணத்திற்கும் வால்மீகி ராமாயணத்திற்கும் பல பேதங்களுண்டு. அத்யாத்ம ராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கும் சிலகதைகள் வால்மீகத்திலில்லை. மற்ற ராமாயணங்களிலில்லாத அநேக கதைகள் ஆனந்த ராமாயணத்தில் காணப்படுகின்றன. இத்தனை ராமாயணத்திலுமுள்ள கதைகளில்முக்கிய இடங்களிலெல்லாம் கம்பராமாயணம் மாறுபட்டே எழுதி இருக்கிறது. ஆரியருக்கு அடிமை புகுந்த கம்பன் தன் ராமாயணத்தால் தமிழ் நாட்டையே அந்த வாசற்படியில் புகுத்தி விட்டான் என்பது மிகையாகாது. வால்மீகி ராமாயணமும் அதை ஆதாரமாகக்கொண்ட பல காவியங்களும் நாடகங்களும் சம்புக்களும் கதைகளை வெவ்வேறு விதமாகச் சொல்லுகின்றன. இந்த ராமாயணங்களில் எது பொய் எது மெய் என்பதையும் இதன் மூலங்களையும் இதில் சம்மந்தப்பட்டவர்களின் மூலங்களையும் ஆராய்ந்தால் எந்த ராமாயணக் கதையும் எங்குமிருக்காது. ராமாயணக் கதையே அப்படி இருக்கிறதேயல்லாமல் அதை 'குடி அரசால்' சொல்லப்படும் குற்றமல்ல. இத்தனை வித்தியாசமுடைய இத்தனை ராமாயணக் கதைகளிலும் ராமனுக்கு 12 வயதில் கலியாணமாயிற்று என்பதைக் காணோம். என்னை விட ராமாயணத்தைத் தெரிந்தவர்கள் 'குடி அரசில்' எழுதிக்கொண்டு வருவதால் நான் எடுத்த விஷயத்தை முடிக்கப் புறப்படுகிறேன்.

பெண்கள் தங்களுடைய விருப்பத்தைச் சொல்லாமல் வெளியிடாமல் பல வகைகளால் நாயகன் அறிந்து நடக்கும் படி செய்வதுபோல் காவ்யமும் வெளிப்படையான வார்த்தைகளால் குறிப்பிட்ட விஷயத்தை உபதேசிக்காமல் ஆழ்ந்திருக்கும் கருத்தால் உபதேசித்து மனதைக் கவர ஏற்படுத்தின தென்று சொல்லப்படுகிறது. புராணத்தில் சந்தேகப்படுகையில் அதைத்தள்ளி சாஸ்திரத்தைப் பிரமாணமாகக் கொள்ள வேண்டுவது பிரமாணம். 'ஆதிசேடன் பூமியைத்தாங்குகிறான். ராகு கேது என்னும் பாம்பு சந்திர சூரியர்களை விழுங்குகிறது' என்னும் புராணத்தை நம் பெரியவர்களும் இப்பொழுதிருக்கும் பக்திமான்களும் நம்புகிறார்களேயொழிய இப்பொழுது பூகோள சாஸ்திரம் படிக்கும் பத்து வயது பையன் நம்பமாட்டான். பூமி எப்படி தாங்கப் படுகிறது, கிரகணம் எப்படி உண்டாகிறது என்பவைகள் வானசாஸ்திரத்திலிருந்து தெரியவேண்டியவை. அதுபோல் கலியாணத்தின் தத்துவம் தேக தத்துவ சாஸ்திரத்திலும் காம சாஸ்திரத்திலும் தெரியுமேயொழிய புராணத்தில்தெரியாது. அதற்குப் புராணம் பிரமாணமுமன்று. அதிலும் புராணத்திலில்லாததை தனக்குத் தெரியாமலோ அல்லது தெரிந்து மறைத்துச் சொல்லியோ சனங்களை மூடர்களாக்குவது வெட்கப்படக்கூடிய அக்கிரமமான பாவம்.'

ராமருக்கு 15 வயதிற்கு மேற்பட்டு 16 வயதிற்குள் விஸ்வாமித்திரருடன் யாகத்திற்குப் போனதாகவும் அதற்கு மேற்பட்டே கலியாணம் நடந்ததாகவும் வால்மீகம் சொல்லுகிறது. ராமனைக் கண்டு சீதை ஆசைப் பட்டதும் சீதையைத் தெரிந்து ராமன் ஆசையால் துன்புற்றதாகவும் சீதையை அடைய ராவணன் வில் வளைத்து அவமானப் பட்டதாகவும் சில ராமாயணம் சொல்லுகின்றன. இதனால் சீதை வயது வந்த பெண்ணென்பதற்குச் சந்தேகமில்லை. அந்தப் பெண்ணின் மேல் பன்னிரண்டு வயதுப் பையன் எப்படி ஆசைப்பட முடியும்? ராமனுக்கு எதுதான் சாத்தியமில்லை என்று சொன்னால் 'மனிதனுக்காக நடந்து காண்பிக்க வந்தார்' என்பதில் என்ன அர்த்தமிருக்கிறது? நம்முடைய கணக்குப் பிரகாரம் ராமருடைய காலம் அநேக லட்ச வருடங்களாகி விட்டது. ராமருடைய அவதாரத்திற்குப் பின் நம் கடவுள் அநேக அவதாரமெடுத்தாய் விட்டது. ஒரு அவதாரம் போய் மறு அவதாரம் வந்து விட்டால் சென்ற அவதாரத்தின் சட்டதிட்டங்கள் போய்விடும். போய்விட்டதென்பதும் அநுபோகம். ராமாவதாரத்திற்குப் பின் பரசுராமருடைய கொள்கை பலிக்கவில்லை. பௌத்த அவதாரத்திற்குப்பின் கிருஷ்ண அவதாரம் மங்கிவிட்டது. ராமானுஜாச்சாரியின் அவதாரத்திற்குப் பின் எல்லா அவதாரங்களும் வெள்ளைக்காரர்களின் தீர்ப்புக்கு கைகட்டிக் காத்திருக்கிறது. 'குடி அரசின்' கொள்கையைக் குடிகள் உணர்ந்தால் எல்லா அவதாரத்தின் மகிமையும் நம் நாட்டில் விளங்கும்.

ஆதி சங்கராச்சாரிக்கு ஏழு வயதில் பந்துக்கள் கல்யாணம் செய்ய முற்பட்டார்கள் என்று சிதம்பர வைதிக சபைத்தலைவர் சொல்லுகிறார். இவருக்கு சங்கருடைய சரித்திரம் தெரியாது என்று சொன்னால் மட்டும் போதாது. இதை சபையில் சொல்லுவதற்கு மனம் சிறிதுகூட வெட்கப் படாமல் சாஸ்திரமென்னும் பெயரால் மற்றவர்களை ஏய்த்து லாபமடைந்த பழக்கமென்றும்சொல்லவேண்டும். நான்சொல்லுவதைமறுக்கமுடியாது.

இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க

# சமூக ஊழியம் மக்களின் மாண்பு.

சாமி சிதம்பரனர் எழுதியது

கட்டுரை 1-

மக்களின் பெருமையைச் சிறிது பொறுமையோடு எண்ணுவோமாயின் மிகவும் ஆச்சரியத்தை விளைக்காமற் போகாது. பழைய நூல்களின் அறிவுகொண்டு மக்களியல்பை ஆராய்வதால் முழு உண்மையையும் அறியமுடியாது. பழைமையான, மக்களை மயக்கும், மதங்களின் வழியாக மக்களியல்பை ஆராய்ந்தாலும் உண்மைகாண வியலாது. பெரியோர்களின் வாய்மொழியைக் கொண்டும் மக்களின் மாண்பை அறிய முடியாது. நமது பகுத்தறிவைக்கொண்டு மக்களின் இயல்பைச் சிறிது ஆழ்ந்து சிந்தித்தால்தான் அறிய முடியும். உலகில் இஞ்ஞான்று நடைபெறுகின்ற பெரும் செயல்கள் யாவும் மக்களின் அறிவின் திறத்தாலேயே நடைபெறுகின்றது. "அரிது அரிது மானிடராதலரிது" என்று கூறும் தமிழர்களின் மொழி உண்மையேயாகும். இவ்வுலகில் எத்தனையோ உயிர்த்தொகைகள் நிறைந்திருக்கின்றன. ஆயினும் அவைகளின் பெருமையை யறிவதற்கு அறிகுறிகள் யாதொன்றுமில்லை. ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மிருகங்களும், பறவைகளும், எந்த உணவுவகைகளை உண்டனவோ அந்த உணவுகளையே இப்பொழுதும் உண்ணுகின்றன. அவைகள் அந்தக்காலத்தில் எந்த வகையாகப் பேசினவோ அந்த வகையாகவே இந்தக்காலத்திலும் கூச்சலிடுகின்றன. இவைகளை யெல்லாம் எண்ணிப்பார்க்கும்போது அஃறிணைப் பொருள்களென்று சொல்லக்கூடியன உயர்வுடையன வல்லவென்றேயறியலாம்.

மக்களியல்பை ஆராயும்போது, அவ்வாறின்றி ஒருவித வளர்ச்சிகாணப்படுவதை உணரலாம். வரலாற்றிற்கு எட்டாத மிகப் பழங்காலத்தில் மக்களும் மிருகங்களைப்போலவேதான் வாழ்ந்திருக்க வேண்டுமென்று வாலாற்று நூல் வல்லோர் கூறுவது தவறாகாது. பழங்காலத்தில் ஆடை கட்டாமல் வாழ்ந்த மக்கள், நாளடைவில் ஆடைகளணிய முற்பட்டது ஒரு பெருமையாகும். கண்டவுணவுகளை அப்படியப்படியே உண்டு வயிற்றுப்பசியைத் தணித்து உயிர் வாழ்ந்த மக்கள் வரவர இன்னின்னவைகள் மக்கள்உண்பதற்கு ஏற்றனவென்று வரையறைப்படுத்திக்கொண்டது ஒரு பெருமையாகும். உரையாடத்தெரியாத மக்கள் ஒருவர் கருத்தை ஒருவர் அறியும்படி செய்வதற்கு மொழிகளைக்கண்டு பிடித்தது ஒரு பெருமையாகும். பண்டைய மக்கள் கருத்தையும், நாகரீகத்தையும் பிற்காலத்தினர் அறிந்துகொள்ளும்படி மொழிகளை எழுத்தின் வடிவில்வரச்செய்து நூல்கள் ஆக்கிவைத்திருப்பது மிகவும் போற்றற்குரியதொன்றன்றோ? இவ்விதமான வகையில் மக்களையல்லாத பிறவுயிர்கள் முன்னேற்றமடைந்திருக்கின்றனவா? என்றால் இல்லை யென்ற ஒரே மொழியினால் விடை கூறி விடலாமன்றோ?

இந்நாளிலும், பண்டையநாளிலும், கற்றவரையும், மற்றவரையும், பகுத்தறிவுடையவரையுங்கூட மயங்கச்செய்யும், தெய்வக் கூறுபாடுகளையும் மத வேறுபாடுகளையும், நிலையாக நிற்கும்படி செய்திருப்பது மக்களின் அறிவுடைமையைக் காட்டுமன்றோ? ஆ! ஆ! மக்களின் பெருமையை என்னென்று கூறுவது? எத்தனை உலகங்களை உண்டாக்கியிருக்கின்றனர். எத்தனைக் கடவுளரைப் படைத்திருக்கின்றனர். எத்தனைக் கடவுளரை அழித்திருக்கின்றனர். எத்தனைக் கடவுளரைக் காப்பாற்றி வருகின்றனர். அறிவுடைய மக்கள் மனமிரங்காவிட்டால் கடவுளின் வாழ்வெங்கே? மதங்களின் தோற்றமெங்கே? எல்லாம் அழிந்தொழியுமன்றோ! அறிவின் பெருமையே பெருமை. அதிலும் மக்களறிவின் மாட்சியை என்னென்று கூறுவது.

இனி மக்களறிவில் ஏதேனும் உயர்வு தாழ்வுண்டோ வென்பதைச் சிறிது சிந்தனை செய்யவும் வேண்டும். எல்லா மக்களும் பிறக்கும்போது ஒரேவித அறிவுடன்தான் பிறக்கின்றனர். மக்கள் உடலமைப்பில் யாதொருவேறுபாடும் இருப்பதாகக்காணேம். எல்லோர் உடற்கூறுகளும் ஒருவகையாகவே அமைந்திருக்கின்றன. குழந்தைப்பருவத்தைக் கூர்ந்து நோக்குவோமாயின் இவ்வுண்மையை உணரலாம். எல்லாக்குழந்தைகளின் அறிவும், செய்கையும், நிலைமையும், ஒன்றாயிருப்பதைக்காணலாம். ஆனால் வயதேறிய பின்னர் மக்களுக்குள் வேறுபாடு காணப்படுகிறது. அவ்வேறுபாடும் அறிவு பற்றி நிகழும் வேறுபாடேயாகும். சிலர் அறிவு எதையும் உணரக்கூடியதாகவும், உலகச்செய்திகள் பலவற்றைத் தெரிந்துகொள்ளக் கூடியதாகவும் விரிவடைந்திருக்கின்றது. சிலருடைய அறிவு நடுத்தரமான நிலையிலிருக்கின்றது. சிலருடைய அறிவு குழந்தைப் பருவத்திலேயே இருக்கின்றது. இங்ஙனம் அறிவு பல வகையாக இருப்பதற்குக் காரணம், அவரவர்களின் பழக்கவழக்கமும் காலதேச வர்த்தமானங்களுமேயாகும். தந்தையின் பொருளைச்சரிபாகமாகப்பகிர்ந்து கொண்டமைந்தர்களில் சிலர் தமது பொருளைக் கொண்டே மேலும் மேலும் பொருளீட்டுவதைப் போலவும், சிலர் கிடைத்தபொருளை மட்டிலும்வைத்திருப்பதைப்போலவுமே இவ்வறிவின் விரிவும்விரிவின்மையுமாகும். சிலர் அறிவு நல்ல செய்கைகளைச் செய்து மேன்மை பெறுவதையும், சிலர் அறிவு தீயசெய்கைகளைச் செய்வதையும் காணுகின்றோம். இரண்டும் அறிவுதான். ஆனால் ஒன்று தீயவழியில் செல்லுகின்றது; மற்றொன்று நல்ல வழியிற் போகின்றதே தவிர அறிவில் ஒன்றும் வேறுபாடில்லை. இத்தகைய மக்களின் பெருமையை என்னென்று கூறுவது?

மற்றும் இலக்கணநூலில் ஒரு உண்மை காணப்படுகிறது. அதாவது உலகப் பொருள்களை இரண்டு வகையாகப் பிரித்ததில் சிலவற்றை உயர்திணையாகவும், பலவற்றை அஃறிணையாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. மக்களை உயர்ந்ததிணையென்று கூறப்படுகின்றது. உயர்ந்ததிணை யென்பதற்கு உயர்ந்த குலமென்பது பொருள். ஆகவே மக்கள் அனைவரும் உயர்வுடையவர்கள் என்பதை இலக்கண நூலால் அறியலாம். இத்தகைய உயர்வுடைத்த மக்கள் அனைவரும் தங்கள் உயர்வை உணர்ந்திருக்கின்றார்களா வென்றால் இல்லையென்றுதான் சொல்லவேண்டும். தங்கள் உயர்வை உணர்ந்த மக்கள்தான் இவ்வுலகில் சிறந்து விளங்குகின்றவர்கள். உலகத்தை நடத்துவிப்பவர்கள். அவர்கள் ஆக்கவும் அழிக்கவும் ஆற்றல் படைத்தவர்கள். தனது பெருமையை உணர்வதுதான் தெய்வ சக்தி. தனது ஆற்றலை அறிவதுதான் கடவுளருள். தனது சக்தியை அறியாதவரையில் அடிமை வாழ்வு வாழ வேண்டியதுதான். உரிமை வாழ்வை யடையவேண்டுமாயின் தனது தெய்வ சக்தியை யுணரவேண்டும்.

நம்மிடமுள்ள ஒரு பேராற்றலை நாமுணர்ந்திருப்பதிலேயே நமது விடுதலை அடங்கியிருக்கின்றது. நமது பேராற்றலை நாமுணர்வதற்குப் பெருந்தடையாகவிருப்பது பாழான பழைய மதங்களே யன்றி வேறொன்றுமில்லை யென்பதைப் பகுத்தறிவினாலுணரலாம். மனிதப் பிறவியே பாவத்தினால் உண்டானதென்றும், ஆதலால் மனிதன் தன்னுடைய பாவத்தை நீக்குவதற்கே வழி தேடவேண்டுமென்றும் கூறி, உயர்வான தெய்வத்தன்மை வாய்ந்த மக்களின் ஊக்கத்தை அடக்கியொடுக்கி விடுகின்ற மதங்களே மிகப்பலவாக மலிந்து கிடக்கின்றன. மக்கள் பெரும்பாலும் பகுத்தறிவுக்கு உரிமை கொடுப்பதில்லை யென்னும் உண்மையை யாவரும் உணர்ந்திருப்பது இன்றியமையாததாகும்.

ஆகவே மக்கள் தமது பேராற்றலை, அதாவது தமக்குள்ளிருக்கும் தெய்வ சக்தியை அறிந்தால்தான் மானமுடையவராவார்கள். சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறவேண்டுமாயின் சுயமரியாதையுடையவராவார் என்று கூறலாம். தாம் பாழான பாவவுலகில் வாழ்வதாகவும், தாம் பாவத்தினாலேயே கட்டுப்பட்டுக் கிடப்பதாகவும், எண்ணிக்கொண்டு பகுத்தறிவுக்குச் சிறிதும் வேலை கொடுக்காமல், அல்லும் பகலும் கண்ணை மூடிக்கொண்டிருந்து, கவலையடைந்து, காலத்தைக்கடத்தி இறக்கின்றவர் எத்தனை அறிவாளிகள்! உடம்பிலிருந்து உயிர் விடுபடுவதற்கு வீடு என்று சொல்லப்படுவதன் உண்மையை உணராமல், வீடு பெற அதாவது மோட்சமடைய தனது வாழ் நாளில் இன்பத்தை யெல்லாம் உதறித்தள்ளித் துன்பமுறுகின்றவர்கள் எத்தனையர்? தமது தெய்வ சக்தியை அறிந்திருப்பாராயின் அவர் வாழ்க்கை இன்ப வாழ்க்கையாக முடியுமன்றோ?

பரிசுத்தமான, இன்பமான மனிதப்பிறவியை எடுத்திருக்கின்ற தெய்வத்தன்மை யமைந்த நாம் என் நம்மைத்தாழ்வாக நினைத்துக்கொள்ளவேண்டும்? மாடு கட்டாமல், குதிரை கட்டாமல், ஆளிழுக்காமல், வண்டியோடுவதை இக்காலத்திற்கண்கூடாகக் காண்கின்றோம். பண்டைக்காலத்தில் இப்படிப்பட்டவைகள் தெய்வத்தினால் செய்யக்கூடிய செயலென்று எண்ணி வந்தனர். ஆகாயத்தில் பறக்கும் கப்பல்களை இக்காலத்திற் காண்கின்றோம். பண்டை நாளில் இச்செயல், கடவுளால் செய்யக்கூடிய பெருஞ்செயலாகக் கருதப்பட்டுவந்து. இவ்வாறான பொருள்களை யறிந்த அறிவுதான் தெய்வம். அதுதான் கடவுட்சக்தியென்பது. இதைத்தான் அறிவாளிகளும், "அறிவான தெய்வமே" என்று பலபடியாகக் கூறியிருக்கின்றார் என்று நாம் நினைக்கின்றோம்,

ஆகவே எந்த மனிதரும் தம்மிடம் ஒரு பெரும் சக்தியிருக்கின்றதென்னும் உண்மையை உணர வேண்டும், அவ்வுணர்ச்சியே, முன்னேற்றத்தை யளிக்கவல்லது. மக்களுயர்விற்கு இதுவே அடிப்படையாகும். மனிதன் பாவமுடையவன், சுதந்தரமற்றவன், ஆற்றல் அற்றவன் என்ற உணர்ச்சி இருக்கின்றவரையில் உலக வாழ்க்கையில் இன்பமில்லை. "மனிதன் தெய்வத்தன்மை பெற்றவன்" என்ற உண்மை உலகமுழுவதும் பரவ வேண்டும். அக்காலந்தான் எங்கும் இன்பம் தாண்டவமாடும் காலமாகும். நாம் யாவரும் நம் பெருமையை யறிந்து சமூக விடுதலைக்கு உழைப்போமாகவும்.


24 மணி நேரத்தில் குணம்.

எங்கள் டாக்டர் வி. ஜி. என் ரிங்குவாம்லோஷன் உபயோகிப்பதினால் படை, காரகப்படை எச்சத்தளிம்பு மற்ற எவ்வித சர்ம வியாதிகள் யாவும் 24மணிக்குள் நீங்கும். பெட்டி 1க்கு அணா 10

எஸ். ஸி. ஆர். பகவான் அண்டு கம்பெனி.

மிண்டு பில்டிங், மதராஸ்.

இனும்! 1928 இனும்!!

தங்கள் விலாசத்தைத் தெரியபடுத்தினால் நாங்கள் 1928ஹு காலண்டரும் ஆரோக்கிய சமாசாரமும் தபால் செலவின்றித் தங்களுக்கு அனுப்புகிறோம்.

சித்த ஔஷதசாலை கம்பெனி,

போஸ்டு முல்லச்சேரி, மலபார்.

நான்கு

# வேதங்களின் வரலாறு.

"எப்பொருள் யார் யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு' (குறள்)

ஹிதோபதேச சுலோகத்தின் பொருள்:—

"அநேக சந்தேகங்களை அறுக்கிறதும் காணப்படாத வஸ்துவை (கடவுளை)க் காண்பிக்கிறதும், எல்லாருக்கும் கண்ணாயிருக்கிறதுமான சாஸ்திரம் (வேதம்) எவனுக்கு இல்லையோ அவனே குருடனாயிருக்கிறான் என்று பொதுவாய் வெளியிடுகிறது. இந்தச் சற்போதனையை எத்தேசத்தாரும் ஒப்புவார்கள்."

1. சதுர்வேதம் அநாதி என்று—வேதாந்த சித்தாந்த சமவாதம். வஸ்து நிச்சயம். 65ம் பாட்டில்:—"அந்த நாலு வேதமும் அநாதியாயிருக்கிறது. அந்த வேதங்களும் சொன்ன நல்ல பொருள் உண்மைப் பொருளாய் இருந்தது. அந்தப் பொருளை உறுதியாகக் கொண்டவர்கள் துன்பம் இல்லாமல் எப்போதும் ஒரே தன்மை உள்ளவர்களாய் நிலைத்து பேரானந்தத்திலே வாழுவார்கள்" என்றிருக்கிறது.

2. பாகவதம்:—3வது ஸ்கந்தம். 12ம் அத்தியாயம் 34, 37ல் வெளியாகிறதாவது "அந்தப் பிரமாவானவன் தன்னுடைய நாலு முகங்களிலும் இருந்து கிரமமாய் இருக்கு, யசுர், சாம, அதர்வண வேதங்களையும் உண்டாகச் செய்தான். மேலும் மந்திர ஸ்தோத்திரத்தையும், யாகத்தையும், கீதத்தையும், பிராயச்சித்தத்தையும் (பலி உண்டாக்கினான்" என்பதேயாம்.

3. பாகவதம்:—9ம் ஸ்கந்தம்: 14ம் அத்தியாயம். 51, 52ல்:— 'ஓ அரசனே! ஆதியிலே ஒரே வேதம் இருந்தது. எல்லாம் வாக்கு மயமான பிரணவ மந்திரமே அந்த வேதம். திரேதாயுகத்தின் முதலிலே புரூரவன் என்கிற இராஜாவினாலே தான் மூன்று வேதமும் உண்டானது' என்று கூறுகின்றது.

4. விஷ்ணு புராணம்:- அப்படியல்ல; "விஷ்ணு வேதவியாசனாக ரூபம் எடுத்து ஒன்றாய் இருந்த வேதத்தை நான்கு வேதமாகப் பிரித்து அநேக உட்பிரிவுகளினாலே விஸ்தாரம் ஆக்கினான்" என்கிறது.

5. பிரமோத்தர காண்டம்:— 'சிருருத்திர மகிமையுரைத்தது. 10ம் பாட்டில் "சிவன் தன்னுடைய இச்சையினாலே எடுத்துக்கொண்ட மூன்று குணங்களுக்குள்ளே ஒன்றாய் இருக்கிற இராசத குணத்தினாலே பிரமதேவனைச் சிருஷ்டித்து வேத சாஸ்திரங்களை எல்லாம் அந்தப் பிரமாவுக்கு அப்போதே போதித்தான்" என்று வெளியிட்டிருக்கின்றது.

6. ஹரிவம்சம் 11,056ல்:—"வேதங்களுக்குத் தாயாகவும், மூன்று அடிகளை உடையதாகவும் இருக்கிற காயத்திரி மந்திரத்தை பிர்மா உண்டாக்கினான். அந்தக்காயத்ரியிலிருந்து நாலு வேதங்களையும் உண்டாகச் செய்தான்" என்று கூறுகிறது.

7 மானவதரும சாஸ்திரம் 2ம்:- அத்; 77ம் சுலோகம் கூறுவதாவது "தத் என்கின்ற சொல்லை முதலில் உடைய காயத்திரி மந்திரத்தினுடைய மூன்று அடிகளைப் பிரம்மா மூன்று வேதங்களில் இருந்தே ஒழுங்காகக் கறந்தான்" என்பதே.

8 மானவ தரும சாஸ்திரம்:- 1 அத்: 23ம் சுலோகம்:- "யாகங்களை நிறைவேற்றும்படியாக பிரம்மா நெருப்பிலேயிருந்து இருக்கு வேதத்தையும் காற்றிலேயிருந்து யசுர் வேதத்தையும் சூரியனிலேயிருந்து சாமவேதத்தையும் கறந்தான்" என்று வெளியிடுகிறது. இது முந்தியதை மறுக்கிறது.

9 வேதாந்த பிரகாசம் என்னும் நூலிலே சொல்லப்பட்டதாவது:-"வேதமான நூலைத் தரித்த பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் என்னப்பட்ட 3 ஜாதிக்கே யல்லாமல் வேறே யாருக்கும உரியதல்ல" என்கிறது

10 ஸ்திரீகளும் சூத்திரர்களும் வேதங்களைக் கேட்கவும் கூடாது என்று சொல்லுகிற சுலோகத்தின் பொருள் என்னவெனில் "இருக்கு, யசுர், சாமம் என்கின்ற மூன்று வேதங்களையும் ஸ்திரீகளும் சூத்திரர்களும் ஜாதி கெட்ட துவிசர்களும் காதினால் கேட்கவும் கூடாது" என்று கண்டிக்கிறது.

11 பாகவதம் 3ம் ஸ்கந்தம் 12ம் அத்தியாயம் 39ம் சுலோகத்தில்:- "சகலத்தையும் பார்க்கிற ஈஸ்வரன் தன்னுடைய எல்லா முகங்களிலும் இருந்து இதிகாச புராணங்களை ஐந்தாம் வேதமாகப் பிறப்பித்தான்" என்று வெளியிட்டிருக்கிறது.

மேற் சொல்லிய நூல்களின் பொருட்களை ஆராய்ந்து சிந்திப்போருக்கு ஆரியவேத சாஸ்திர புராணேதிகாச முதலியவைகள் உள்ளபடியே சிருஷ்டி கரும்சர்வலோகாதிபதியும்சர்வஜீவதயாபரருமான ஒரே மெய்யான கடவுளால் மக்கள் அனைவருக்கும் பொதுவாகவும் தம்மை அறிந்து உய்ய எவருக்கும் அவசியத் தேவையானதுமாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற அருள் வேதமா? என்பதும் அல்லது பூலோகத்திலுள்ள ஐந்து கண்டங்களில் ஒன்றாகிய ஆசியாவின் ஒரு சிறு பாகத்திலுள்ள நமது பரதகண்ட வாசிகளில் ஒரு சிறு வகுப்பாரான ஆரிய வர்த்தவாசிகள் தங்களுக்கு மாத்திரம் உரியதென்று தாங்களே ஏற்படுத்திக்கொண்ட கட்டுரையான இயல்வேதமா என்பதும் விளங்கக்கூடும்.

எப்படியெனில் தற்காலத்தில் பற்பல பாஷாக்கியானம் உள்ள கற்றோரானாலும் சரி கல்லாதோரானாலும் சரி எத்தாரத்தாரும் பற்பல தேசங்களுக்குப்போய் வந்ததினாலும், பல தேசத்தார்களுடன் கூடிவசித்து பலவகையிலும் பழகிவருகிறதினாலும் அருள் வேத இயல்வேதக்காரர்களுடைய வைதீக இலௌகீக கர்மானுஷ்டானங்களைக் கண்ணாரக்கண்டும் காதாரக்கேட்டும்வருகிறதினாலும் மாத்திரமல்ல உலகமெங்குமுள்ள மதானுசாரிகளின் அபிவிருத்திகளையும் இந்து சமயத்தார்களிலேயே எத்தனையோ! நவீனமதங்கள் ஏற்பட்டு பார்ப்பனீயங்களை ஒழித்து விடுகிறதினாலும் இயல்வேத சமயங்களின் சீர்கேடும் அருள்வேத சமயங்களின் சன்மார்க்க நீதிநெறி இல்லற தருமம் ஏகவேத வழிபாடு, ஏகபத்தினி விரதமும் எத்தேச வாசிகளிடத்திலும் அன்பும் சகோதரத்துவமும் நடைப்பெற்றுவருகின்றதை சர்வாநுபவமாய் அநுபவித்து உள்ளங்கை நெல்லிக்கனி போல தெரிந்திருக்கிறோம். இவ்விஷயத்தை எவரும் மறுக்கார்கள்.

மேலும் மேற்குறிப்பிட்டிருக்கிற ஆரிய சமய "இயல்வேதங்களின் ஆபாசங்களை நமது முன்னோர்களில் எவரெவர்கள் கவனித்தார்களோ! அவரவர்களும் தங்கள் பின்னடியார்களின் முன்னேற்றத்துக்கும், தேசத்தின் அபிவிர்த்திக்கும் எல்லாரும் ஒரே இனமான மனிதர்களாகையால் சகோதரத்தன்மையும், ஒருவருக்கொருவர் அன்பும் ஐக்கியமும் பொருந்தி மேம்பாடடையும் படிக்குச் சில பாடல்கள் ஏற்படுத்தி இருக்கிறதையும் இதில் குறிப்பிடுவது பலருக்கும் நன்கு விளங்குமென்று நம்பியிதனடியில் எழுதலானேன்.

தாயுமான சுவாமிகள்:-"எதுந்தெரியா தெனை மறைத்த வல்லிருளை காதா நீ நீக்க வொருஞான விளக்கில்லையோ" என்றார்.

பொய்யாப் புலவர் திருக்குறள்,— "எல்லா விளக்கும் விளக்கல்லசான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு" என்கிறார்.

பத்திரகிரியார்:—'சாத்திரத்தைச் சுட்டு சதுர் மறையைப் பொய்யாக்கிச் சூத்திரத்தைக்கண்டு சுகம்பெறுவ தெக்காலம்"—என்கிறார்.

பாய்ச்சலூர்ப் பதிகம்:—ஓதிய நூலும் பொய்யே யுடலுயிர் தானும் பொய்யே சாதியு மொன்றே யாகுஞ் சகலமும் வேறதாமோ" என்கிறது.

கடுவெளிச்சித்தர்:— பொய் வேதந்தன்னைப் பாராதே அந்தப் போதகர் சொற் புத்தி போத வோராதே" என்கிறார்.

ஒழிவிலொடுக்கம்:—"பெண்ணு ணலியாய்ப் பிறந்து வளர்ந்தே யொழியு மெண்ணுத பேதமியல் பின்றிப்பண்ணுங்காற் காரணகர்த்தா வொருவனுண்டவனைக்காட்டு நூலாரணமு மாகமமுமாம்" என்று வெளியிடுகிறது.

கொங்கணர்பாடல்:—கடவுளொன்றொருவனுண்டே வேதமொன்றே காரண சற்குரு தீட்சை தானுமொன்றே அடைவுடனே அவாருளும் பதவியொன்றே அம்புவியில் மனுப்பிறவி யானதொன்றே நடைவழியும் பலமனுவோர்க்கொன்றே யல்லால் நால் வேத மறுசமய நடக்கை வேறாய்த் திடைமுடைய தேவர் பலருண்டென் போர்கள் தீநரகம் 'காளாவர் திண்ணந்தானே' என்று எச்சரிக்கின்றது.

பட்டணத்து சுவாமிகள்:—"நீற்றைப் புனைந்தென்ன நீராய்ப் போயென்ன நீமனமேமாற்றிப் பிறக்கவகை யறிந்தாயில் மறைமுடியில் எற்றிக் கிடக்கும் எழுகோடி மந்திரம் எதுக்கடா ஆற்றிற் கடந்து துறை தெரியாமல் அலைகின்றதே" என்கிறார்.

சிவவாக்கியம்:—"இருக்கு நாலு வேதமும் எழுத்தறவே யோதினும் பெருக்கநீறு பூசினும் பிதற்றினும் பிரானிரான் உருக்கிநெஞ்சை உட்கலந்து உண்மைகூற வல்லிரேல் சுருக்கமற்ற சோதியைத்தொடர்ந்து கூடலாகுமே' என்கிறது.

சங்கராச்சாரியார் நாதாந்த சாரப்பாடல்;— 'உலகிலே பிறந்து முன்னோரோதிய கலைகளெல்லாம் நிலையதாஞ் சோதிதன்னை, நிசமதாய்ச் சொன்னதில்லை பலபல வேதமாகப் பங்கமாய்க் கூறு செய்தே அலகைபோற் பொய்யைப் பேசியரு நரகழுந்திப் போனார்' என்கிறது.

அருள் வேதம் ஒன்றே எல்லாருக்கும் அவசியம்,-என்று பாடிய பாடலாவது "அத்தனருள் வேதம் போல அவனியிற் பிறிதொன்றில்லை புத்தியாற் புகுந்தோர் காண்பார் புகாதோர் புழுகிதென்பார் சததியங் குருமேலிந்த சடுத்தத்தை வீட்டு நீயும் ஒத்தியே போவாய் நிற்பினுயிர் தலையிழப்பாயுண்மை'

அருள்வேதம்,— "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து பொல்லாங் கானவைகளை விட்டு விலகி நலமானவைகளைப்பற்றிக் கொள்ளுங்கள்" என்று போதிக்கிறது. ஆராய்ச்சி (கி-ன்)


## பனி! பனி! பனி!

குளிர் காலத்திற்கு அடக்கமான கம்பளிப் போர்வைகள் சுத்தமான உரோமத்தால் நம் நாட்டில் நெசவு செய்யப்பட்டவை. 6 முழ நீளம் 3 முழ அகலமும் அழகிய பல நிறங்களில் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| நெ. 1. | 6 முழ நீளம் | 3 முழ அகலம் ரூ. | 15. |
| 2. | ,, | ,, | 12. |
| 3. | ,, | ,, | 10. |
| 4. | $5X2^1$ அகலம் ஷை | | 8. |
| கம்பளித் தொப்பி நெ. | 1 | உருப்படி 1-க்கு | 3-8-0 |
| ஷை | 2 | ஷை | 2-8-0 |
| ,, | 3 | ,, | 2-0-0 |

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

# இதிகாசங்கள்.

திரு. சந்திரசேகரப் பாவலர் எழுதுவது.

4-ம் பாகம்

## இராமாயணம்—பாலகாண்டம்.

மேலே அயோத்தியா புரியிலே தசரத மன்னவனுடைய முயர்ச்சியாலே செய்யப்பெற்ற அசுவமேத யாகத்திலே யாவரும் கூடி சோமக் கொடியின் சாறாகிய கள்ளைக் குடித்து குதிரை பாம்பு ஆமை முதலியவைகளை வேள்வியிலே பாகம் செய்து உண்டு மகிழ்ந்தனர். யாகமும் நிறைவேறிற்று.

பின் பிள்ளைப் பேற்று வேள்வி செய்யப்பெறுகிறது. தீயினின்றும் ஒரு பூதம் தோன்றிப் பாயசம் தருகிறது. அதை தசரதன் மனைவியருக்குப் பகிர்ந்து தருகிறான். திருமால் தமமை நான்கு கூறாக்கிக் கொண்டு தம்மில் பாதியாகிய ஒரு கூறு கோசலை வயிற்றிலும், தம்மில் கால் பாகமாகிய ஒரு கூறு கைகேயி வயிற்றிலும், தம்மின் மீந்த பாகமாகிய இரண்டு கூறுகள் சுமித்திரை வயிற்றிலுமாகப்; புகவே கருநிறைவுற்ற பின் கோசலை இராமனையும் கைகேயி பாதனையும், சுமித்திரை இலக்குமணனையும், சத்துருக்கனையும் பெற்றனர். இவர்கள் நால்வருமே திருமாலின் தோற்றமானவ உலகினர் கருதுமாறு இராமன் மட்டுமே திருமாலின் பிறப்பெனக் கொள்வதுதவறு.

அறுபதினாயிரம் ஆண்டுக்கள் ஆண்டபின்னரே தசரதன் இவ் வேள்வியை யியற்றினன். கம்பரும் இதனையே பால காண்டம் திருவவதாரப் படலத்தில் தசரதன் கூற்றாக,

'அறுபதினாயிர மாண்டு மாண்டுற
உறுபகை பொடுக்கியிவ் வுலகை
யோம்பினேன்'

என்று கூறுகின்றனர். இதனால் அப்போது தசரதனுக்கு அறுபதினாயிரம் ஆண்டுகளுக்குமேலாகவேவயதிருக்க வேண்டும் அதன் பின்னரே இராமன் முதலியநால்வரும் பிறந்திருக்கவேண்டும்- இது நம்புந்தரமானதாகவில்லை. இந்த தசாதன் இவ்வளவு காலம் உலகில் வாழ்வதற்கு என்னதவம் செய்தானோ! யாரிடம் வரம் பெற்றனனோ? தெரியவில்லை. இவனுடைய மனைவியாகிய கோசலை, கைகேசி, சுமித்திரை முதலியவருக்கும் குறைந்தது அறுபதினாயிரம் வயதாவதாயிருக்கவேண்டும். பதினாயிரம் ஆண்டுகள் ஆண்ட பின்னர் இவர்களைத் தசரதன் மணந்து கொண்டானென்று கொண்டாலும் இவர்களுக்குக் குறைந்தது ஐம்பதினாயிரம் வயதாவது ஆயிருக்கவேண்டும். இப்பெண்மணிகள் இவ்வளவு காலம் உயிர் வாழ என்ன தவம் செய்து எவரிடம் என்ன வாம் பெற்றனரோ? தெரியவில்லை. இவ்வளவு வயதான கிழவிகள் எவ்வாறு கருத்தரித்தனரோ? இதுவும் விந்தையே!

தற்காலத்தில் பெண்கள் ஐம்பது வயது வரையில் பிள்ளை பெறுகின்றனர். அதன் மேல் அவர்களுக்குக் கருத்தரிக்கும் தன்மை அற்றுப்போகின்றது. இந்த இராம கதை நிகழ்ந்த காலத்தில் பெண்கள் ஐந்நூறு அல்லது ஐயாயிரம் வயது வரை கருத்தரித்தவர் என்று சொன்னாலும் ஒருவாறு பொருந்தும் பொய்யாகும். ஆனால் இந்தக் கௌசலை முதலிய பெண்களோ ஐம்பதினாயிரம் அறுபதினாயிரம் வயது சென்ற பின்னர் கருத்தரித்தனர் என்று சொல்வது பொய்யுலகமும் ஒப்ப முடியாததாக இருக்கின்றது. இருந்தாலும் அறுபதினாயிரமாண்டு கடந்த இப்பெண்கள் இராமன் முதலிய நால்வரைப்பெற்றனரெனவே வால்மீகி முனிவரும் கம்பரும் கூறுகின்றனர், இவ்வாரியப் புரளியை என்னென்பது.

தான் வெட்டிக்கொன்ற குதிரையை ஓர் நாள் இரவு முழுவதும் கட்டித்தழுவியிருந்த கோசலையும் ஏனைக் கைகேசி சுமித்திரையும் பிள்ளையை உண்டாக்கவல்ல கலை கோட்டு முனி முதலிய ரித்விக்குகளின் சேர்க்கையில் கருவுற்றனர். அதை மறைத்தற்காகவே பாயச வேள்வியும் செய்யப்பட்டது போலும், உண்மையிவ்வாறிருப்பவும் கம்பர் பாயாசத்தை உண்டதனாலேயே கௌசலை யாதியர் கருவுற்றனர் என்று குறித்திருக்கிறார். உயரிய அறிவினராம் கம்பர் இயற்கைக்குமாறாக இவ்வாறு குறித்ததேன்? இயற்கைக்கு மாறும் செய்தியைக் கம்பர் குறித்ததால் இதன் உண்மைதானென்னே என்று நுண்மாண் புலனுடையார் துருவிச்சென்றி வால்மீகியைப்படித்துஉண்மை தெரிந்து கொள்ளட்டும் என்று கருதிப்போலும் இவ்வாறு குறித்தனர்.

தசரதனுக்கு பட்ட மனைவியர் மூவரைத் தவிர வேறு அறுபதினாயிரம் மனைவியருமுண்டு. இவர்களை தசரதன் தன்னைக்கொல்ல வந்த பரசுராமனிடமிருந்து தப்பும் பொருட்டு மணந்தனனெனக்கூறுவர். இது எம்மட்டு உண்மை என்பதைப் பின்னர் ஆராய்வோம். காரணம் எதுவாயிருந்தாலும் தசரதனுக்கு அறுபதினாயிரம் மனைவியரிருந்தனரென்பது கதையின்படி உண்மையே.

அரசனே இவ்வாறு அறுபதினாயிரம் காமக்கிழத்தியரைக் கொண்டிருந்தானென்றால் அவன் நாட்டிலிருந்த குடி மக்களின் ஒழுக்க நிலை எவ்வாறிருந்திருக்குமோ? அண்ணுவி நின்று கொண்டிருந்தால் பிள்ளைகள் ஓடிக்கொண்டன்றோ நீர் கழிப்பர்? தசரதன் தான் ஒருவன் வாழவேண்டிப் பேடித்தனமாக அறுபதினாயிரம் பெண் மக்களின் நல்வாழ்வைக் கெடுத்தானே? ஐயோ! பெருங் கொடும்பாவம் உலகினர் இரண்டு பெண்டாட்டிக்காரனுக்கு கொண்டை யென்னத்திற் கடி கொண்டை என்பர். ஒரு மனைவியைக் கொண்டு காலங்கழிப்பது மிகவும் கடினமாக இருக்கிறதனால் அறிவுடைய நன் மக்கள் இரண்டாமுறை மணக்கவேண்டுமென்று வனவினும் மறந்து நினையார்' இரண்டு பெண்டாட்டியால் உண்டாம் இன்னாட்டமே மிகக்கொடியது. ஒருவன் அறுபதினாயிரத்து மூன்று மனைவியரை வைத்திருந்தானென்பது கேட்கக்கூடப் பயமும் அச்சத்தையும் அருவருப்பையும் தருகின்றதன்றோ? அந்தோ பரிதாபம்! அறுபதினாயிரத்து மூவருக்கு ஒருவன் கணவனென்றால் அவர்கள் ஒவ்வொருவரையும் கவனிக்குமிடத்து அவன் இருந்தும் இறந்த வனேயாவனல்லவா? அவர்கள் என்ன கதி என்னப்பட்டனரோ? பாவம், பாவம்! நிற்க கோசலையாதியருக்குப் பிறந்த நான்கு பிள்ளைகளும நன்றாக வளர்ந்து வருவாராயினர் அவர்களில் இராமனுக்குத்துணையாக இலக்குவனும் பாதனுக்குத் துணையாகச் சத்துருக்கனும் இணைபிரியாதிருந்து வந்தனர். இவர்கள கல்வி பயின்று பதினாறுட்டைப்பிராயத்தாராயினர். அது கண்ட தசரதன் அவர்களுக்குத் திருமணத்தைச் சிந்தித்தான்.

அமைச்சரோடும் திருமணஞ்சிந்தித்திருந்த தசானை காதி மகனான விசுவாமித்திர முனிவன் வந்து கண்டான். அவன் மன்னனை நோக்கி இராமனைத் தன்னுடன் பத்து நாளைச்கு அனுப்பி தான் செய்யும் வேள்வியைக் காக்கவேண்டுமென வேண்டினன் உடனே மன்னவன் நினைவிழந்து ஓ! முனிவரே!! யான் பிறந்து அறுபதினாயிரம் ஆண்டுகள் சென்று இந்த இராமனை அருமையாகப் பெற்றேன், எனது பிள்ளைகள் நால்வருள்ளும் இராமனிடத்தில் எனக்குப் பேராசை பெருகிவிட்டது. ஆதலால் அவனை அழைத்துக்கொண்டு போகவேண்டாம் உம்மை வருத்தும் அரக்கர் யாவர் "எனப்புகன்றனன். உடனே விசுவாமித்திரன்" புலத்தியமா முனி குலத்தினனான இராவணனென்று ஓர் அரக்கனிருக்கிறான். அவன் மாரீசன்சுபாகு என்ற இரண்டு அரக்கரையனுப்பி வேள்விகளைக் கெடுக்கின்றான்" என்று கூறினன். அது கேட்ட மன்னன்" அந்த இராவணன் முன் நின்று போர் செய்ய யான் வல்லவனல்லேன். தேவர்கள் கந்தர்வர்கள் இயக்கர்கள் முதலியோரும் கூட இராவணனோடுபோர்செய்யவல்லமையில்லாதிருக்க மானிடர்கள் எவ்வளவு? அவனோ மிக்க வல்லமை பெற்றவர்களின் வல்லமையையும் போர் தன்னில் அடக்கிவிடுகிறான். அவனோடாவது அவனுடைய படைகளோடாவது; போர் செய்ய என்றால் முடியாது யான் எனது படைகளைக் கூட்டி வந்தாலும் முடியாது. எனது மக்களோடு கூடி வந்தாலும் முடியாது. ஆதலின் சிறு குழந்தையான இராமனை நீர் என்ன பாடு பட்டாலும் கொடுக்கவே மாட்டேன். உமது யாகத்தை அழிக்க வந்துள்ள சுபாகு மாரீசரோ மிகவல்லமை பெற்றவர். ஆதலால் வேண்டுமானால் நான் அவர்களுள் ஒருவனோடு போர் செய்ய வருகிறேன் "என்று கெஞ்சினன். அப்போது முனிவர் சினமிகக் கொண்டார் இது வரை நிகழ்ச்சி வால்மீகி இராமாயணம் பாலகண்டம் இருபதாவது சருக்கத்திலுள்ளது அதனாலே [illegible]

இதன் தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

# மதுரைக் கோவிலும் சுயமரியாதையும்

(மதுரை, ஏ. எஸ். அருணாசலம் எழுதுவது)

மதுரைக் கோவில் தென்னிந்தியாவிலேயே சீரும் சிறப்பும் பெற்று தலை சிறந்து விளங்குகிறதென்பது வாசகர்கள் யாவருமறிந்த விஷயமாகும். ஆனாலும் பார்ப்பன ரல்லாதாரின் செல்வத்தையே ஜாஸ்தியாக உடையதென்பதையும் நண்பர்கட்கு ஞாபக மூட்டுகிறோம். மேற்படி கோவில் பார்ப்பன ரல்லாதாரின் சுயமரியாதையையும் சுதந்தரத்தையும் கெடுக்க சில பார்ப்பனர்களும் அவர்கள் வசப்பட்ட கோடாரிக் காம்புகளாகிய ஒரு சில பார்ப்பன ரல்லாதாரும் தலைப் பட்டிருப்பதை நோக்க நமக்கு விசனம் உண்டாகின்றது. சென்ற ஆண்டில் நிர்வாகம் நடத்திய குப்புசாமி அய்யரின் அழுகிய நிர்வாகத்தை நண்பர் இராமசாமி அவர்களும் நாங்களும் கண்டிக்க ஆரம்பித்ததும் அவர் ராஜிநாமா செய்ததும் அதன்பின் தற்போதுள்ள டிரஸ்டி திரு ராமலிங்க முதலியார் அவர்கள் டிரஸ்டி வேலைக்கு வந்ததும் வாசகர்கள் அறிந்திருப்பீர்கள். தற்சமயம் முதலியார் டிரஸ்டி அவர்கள் நமது சுயமரியாதைக்கு நேர் விரோதமாக ஓர் விளம்பரப் பலகை மேலே கோபுர வாசல்களில் போட்டிருக்கிறார்கள், அதில் வழக்கமாக யூனிபாரம் மேல் சட்டையும் கால் சட்டையும் மேல்ஜோடும் கால் ஜோடும் அணிந்துகொண்டுபோகிறவர்கள் போகலாமென்றும் வழக்கமாக பாதரக்ஷையை கையில் பிடித்துக் கொண்டு ஆடி வீதியின் வழியாக போகக் கூடாதென்றும் கடையில் சாமானை வாங்கிக் கொண்டு வழிநடைப் பாதையாக கோவிலை உபயோகக் கூடாதென்றும் உத்திரவிட்டிருக்கிறார். செருப்பை கையில் எடுத்துக் கொண்டு போக வேணும் பூட்சுகாலுடன் நடக்கலாம் என்பதின் அர்த்தமென்ன? செருப்புக்கும் பூட்சுக்குமுள்ள மதிப்பு விலை வித்தியாசத்தினாலா? வெள்ளையர்களும் பார்ப்பனர்களுமே பூட்சு காலுடன் கோவிலுக்கு வந்து கொண்டிருப்பதால் வெள்ளையர்களுக்கும் வேதியர்களுக்கும் ஸ்ரீமான் முதலியாரவர்கள் பயந்துகொண்டிருக்கிறாரா? வழக்கமாக செருப்பை கையில் கொண்டு சென்றாலும் இனி கொண்டுபோக கூடாதென்று பார்ப்பனரல்லாதார் மீது 144 வது பாணமும், பார்ப்பனருக்கும் வெள்ளைக்காரருக்கும் வழக்கத்தை அனுசரிக்கு-மாறும் உத்திரவிட என்ன அவசியம் இப்போது நேர்ந்ததென்பது விளங்கவில்லை. இனி சாமான் வாங்கிக்கொண்டு கோவிலின் வழியாக போகக்கூடாதென்றார். கோவிலில் பூக்கடைகளும் பலழக்கடைகளும் பாத்திரக்கடைகளும் குங்குமக்கடைகளுமிருக்கும் போது சாமான்வாங்கிக்கொண்டு எப்படிப்போவதென்பதும் தெரியவில்லை. கோவில கடைக்காரர்கள் தங்களுக்கு வீட்டிற்குப்போக சவுகரியமில்லாத போது சாப்பாட்டை வரவழைத்து சாப்பிட்டு எலும்பு எச்சல்களை கோவிலில் போடுகிறார்களே! சாராயம் குடிக்கும் சில கடைக்காரர்கள் கூட சீசாவில் வாங்கிவந்துகோவிலில்குடிக்கிறதாகவும் கேள்வி. பூக்கடை குங்குமக்கடை முன்னால் பார்ப்பனர்களுக்கு காபி பட்சணம் விற்க இடம் கொடுத்து அதனால் எச்சில் இலைகள் ஆயாசமாகக்கிடக்கிறதே! இவையெல்லாமிருக்கும் போது ஸ்ரீ முதலியாரவர்கள் பார்ப்பனரல்லாதாரை அவமானப்படுத்தியும் பார்ப்பனர்களையும் வெள்ளையர்களையும் உயர்த்திக்காட்டுகிறது ஏன்? வியபிசாரம் செய்யும் மாது தன் நெற்றியில் வியபிசாரி என்று எழுதிக்கொள்ள இசையாள் ஆனால் ஸ்ரீ முதலியார் நம் சகோதரர்களை நமது சுவாமியை தரிசிக்கவொட்டாமல் தடுத்துவிட்டு நமது மதத்தைச் சேராதவரும் நம்மை அஞ்ஞானிகள் என்பவருமான கூட்டத்தாரையும் தாமே கடவுளென்றிடும் பாதகரையும் கோவிலில் விடுவது போராதென்று பூட்சு காலுடன் வரலாமென்றும் நம் மதத்தைச் சேர்ந்தவர்கள் பய பக்தியோடு கோவில் வழியாக வெறுங்காலோடும் போககூடாதென்றும்எழுதிக்கட்டித் தொங்கவிடவேண்டுமா? இது இந்தியாவின்சுயமரியாதையை குறைக்கவில்லையா? மதுரைக் காங்கிரஸ் வாதிகளுக்கு கண்ணில்லையா? இது விஷயத்தை பொது மக்கள் தகக கிளர்ச்சி செய்து மேற்படி போர்டை எடுக்குமாறு டிரஸ்டிக்கு எழுத வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்,

# ஆதிதிராவிடர்களுக்கு ஓர் எச்சரிக்கை.

சுனநலவான்களான எமது ஆதிதிராவிட தலைவர்களுக்கும் ஆதிதிராவிட சங்கத்தின் அங்கத்தினர்களுக்கும், எமது எச்சரிக்கை என்னவெனில், தற்காலம் நாம் இருதலைக்கொள்ளிக்கிடைநடுவில் ஊறும் எறும்புக்கு சமானமாயிருக்கிறோம். இந்த நெருக்கடியான சமயத்தில நம் சகோதரர்கள் ஒவ்வொருவரும் முன்வந்து உழைக்கவேண்டும். ராயல் கமிஷன் வந்து என்ன செய்யப்போகிறதென்பதை முன்னமே நன்குணர்ந்த பார்ப்பனர்களும் அவர்கள் பாதமே கதியென தொழுது வரும் பிராமணரல்லாத சிலரும் பகிஷ்காரம்! பகிஷ்காரம்!! என தொண்டை கிழியசத்தம் போடுகிறார்கள். என்? காரியம் மிஞ்சிப்போய் விட்டது என்ற மனவருத்தம் தானேயல்லது வேறல்ல. "ஆதிதிராவிடர்கள் கண் விழித்து கொண்டனர். இப்பொழுது நாம் ராயல் கமிஷனை வரவேற்போமானால் சர். ஸைமன் அவர்கள் முன்பாக திராவிடர்கள் சாக்ஷியம் சொல்லும்போது நாம் செய்துவந்த சூழ்ச்சிகளும் முட்டுக்கட்டைகளும் வெட்டவெளிச்சம் போல் வெளியாகிவிடும். அவைகளை கமிஷன், பாராளுமன்றத்தில் வெளியிட்டால் அவ்வெள்ளையர்கள் இந்தியா தற்சமயம் சுயராஜ்யத்திற்கு தகுதியாய் இல்லையென தீர்மானித்துவிடுவார்கள். அல்லது இன்னமும் அதிகப்படியான உரிமைகளை திராவிடர்களுக்கு வழங்கிவிடுவார்கள். அதன்பின் அக்கதிகமான செல்வாக்கைகொண்டு பார்ப்பனீயத்தை ஒழித்து முன்னேறி விடுவார்கள். அப்புறம் நமது கதி அதோகதியாய் சாஸ்திர மூட்டையை சுமந்து திரிவதே நமது தொழிலாய் ஏற்பட்டுவிடும்" என அறிந்து பிராமணர்களும் அவர்கள் தொண்டரும் இதுதான் தக்க சமயமென தலை தட்டி ராயல் கமிஷனை பகிஷ்கரியுங்கள் என சந்து பொந்துக்களிலும் மேடைகளிலும் கூச்சலிட்டு வருகின்றனர். ஆதிதிராவிட சகோதர சகோதரிகளே! எழுமின் இந்த கருணை நிறைந்த கவர்மெண்டார் நமது நடுவில் இருக்கும்போதே மேல்ஜாதி என்று சொல்லிக்கொள்பவர்களான பிராமணர்களும். இவர்போன்ற இன்னம் இதரர்களும் நம்ஜாதி ஏழைமக்களுக்கு செய்துவரும் சூழ்ச்சிகளையும் கொடுமைகளையும் எடுத்துச்சொல்லித்தீர்த்துக் கொள்ளவேண்டும். இன்னும் "தப்பு" அடிக்கபடாதென நம்சங்கங்கள் செய்ததீர்மானத்தை ஆதரித்தவர்கள் பட்டபாடும் அவர்கள் வீடுகள், சேரிகள் தீக்கிரையானதும் கண்டு கண்ணீர் விடாதார் உண்டா? சகோதர சகோதரிகளே! நம்மில் பெரும்பான்மையோர் நகரவாசிகளாய் பெரிய பட்டணங்களில் வசித்து வருவதினாலும் கிராமங்களுக்கு அடிக்கடிபோய் வந்திராததாலும் நம்மில் அநேகர் இதர ஜாதிகளால் நிகழும் இடுக்கண் என்னவென்பதையும் அறிய இடமேற்படாமல் போகின்றது. காரணம் "நாம் வெள்ளை வேட்டிபரையின் நம்மையார் இந்த டவுனில் விலகிநில்என்று சொல்லக்கூடும் நாம் 'சப்பாத்திட்டு உலாவிவருவதையார் தடுக்கக்கூடும்" என்று தமக்கு ஓர் இடைஞ்சலும் இல்லாததினால் தமது இனத்தவரும் பட்டிகளில் அவ்விதமிருக்கிறார்களென்றும் எண்ணி விடுகிறார்கள் அந்தோ! என்னே பரிதாபம்!! நம் தலைவர்களோ நமக்கு இன்னும் தேவையானதெது என்பதை அறியாதவர்கள் போலேயே இன்னம் மௌனமாயிருக்கின்றனர். ஆகையால் நாம் நமது குறைகளை எடுத்சொல்ல ஆங்காங்கு கூட்டங்கள் கூடுங்கள். உங்களிற் சிலர் "குலத்தைக்கெடுக்கவந்த கோடாரிகாம்பு" களாய் முட்டுக்கட்டையிடுபவர்களுக்கு உங்களால் இயன்றமட்டும் நற்புத்தி புகட்டுங்கள். அதற்கு செவிசாய்க்காதவர்களை லட்சியம் செய்யாமல் நமது இனத்தவர் முன்னிலைமைக்கு வர வேண்டுமென்பதை கடைபிடித்து பசி, தாகம், சரீர பிரயாசை பணச்செலவு இவைகளை கவனியாதபடி ஊக்கமாய் உண்மையோடு உழைப்பீர்களானால் நாம் திட்டமாய் முன்னேறுவோம். கூட்டங்களில் நம்முடைய நிலைமையை அறியாதவர்களுக்கு நமது குறைகளை தெளிவாய் எடுத்துச் சொல்லுங்கள். நீங்கள் கூடும் கூட்டங்களில் வீண் குதர்க்கங்களை உங்களுக்குள் வளர்க்கவேண்டாம். அதாவது நான் "கிருஸ்தவன் நீ இந்து" என்ற வீண்விவாதங்கள் எழும்பி தாண்டவமாடிவிடுகிறது, அது நமது நலனுக்கு சற்றும் பொருத்தமாகத்தோன்றவில்லை. இருகரங்களுமற்றவன் எங்ஙனம் ஓர் பளுவைதூக்க சக்தியற்றவனாகிறானோ அவ்விதமும் ஒரு கரமுடையவன் ஒரு பளுவைதூக்க எங்ஙனம் பின்னடைகிறானோ அவ்விதமுமல்லாமல் இருகரங்களுமுடையவரைப்போல் இரு மதஸ்தினரும் கூடி இப்பெரும் காரியத்தை உங்கள் நடக்கையில்செய்து உங்கள்ஒவ்வொருவருடைய உரிமைகளையும் நிலைநாட்ட உங்களை அன்பாய் வேண்டுகிறேன். சிறக நீங்கள் கூட்டங்களை வெகுதுரிதமாய் கூட்டி ஒவ்வொரு கூட்டத்திலும் உங்களுக்கு (பிறால்) விளையும் இடுக்கண்களையும் உங்களுக்கு வேண்டியவைகளையும் வெகு தெளிவாய் எடுத்துகாட்டும் மகஜர் ஒன்று தயாரித்து நேரே நமது தலைவர்களுக்கும் கமிஷனுக்கும் அனுப்பிவையுங்கள். அதில் முக்கியமாய் குறிப்பிடவேண்டியது 1-வது நம்மை இக்கெதிக்காளாக்கின மனுதர்ம சாஸ்திரமும் அதனால் ஏற்படும் கொடுமைகளும் ஒழிக்கப்பட வேண்ம். 2-வது இம்மாதம் சென்னைக்குவரப்போகும் ராயல் கமிஷனை சந்தோஷமாய் வரவேற்க அறிகுறியாக அன்றுதினம் எல்லா ஆலயங்களிலும ஆதிதிராவிடர் ஆலயபிரவேசம் செய்ய எல்லா ஜாதி இந்துக்களும் இடம் தரவேண்டும். 3 வது அல்லாமலும் எல்லா பிராமணர்கள் சேரியின் ரஸ்தாக்களில் ஆதிதிராவிடர் ஊர்வலம் வர இடங்கொடுக்கப்படவேண்டும். 4-வது நமக்கு வேண்டிய சகல காரியங்களையும் கவனிக்க ஜில்லா போர்ட், தாலூக்காபோர்ட். கல்வி இலாக்கா, சுகாதார இலாக்கா, இவைகளில் நம்மவர்களுக்கு என்று அதிகமான ஸ்தானம் கொடுக்கப்பட வேண்டும் என்றும குறிப்பிட்டு எழுதிதெரிவியுங்கள். கமிஷனை ஆதரிக்கும் தொண்டர்களாகவும் சென்னைக்கு செல்லுங்கள். போகும்போது உங்கள் கைகளில் ஓர் தடிவெள்ளைக் கொடியுடன் பிடித்து புரப்படுங்கள். நமது ஆதிதிராவிடரின் இரத்தம் பூமியில் சிந்தினலொழிய நமக்கு ஆலயங்களில் இடம் கிடைக்காதென்றும் பொது ரஸ்தாக்களில் நடக்க உரிமை வழங்கப்படமாட்டாதென்றும் நமது மக்கள் முன்னேற்றமடைய மாட்டார்களென்றும் நான் உறுதியாய் சொல்லுவேன்.

பெ. தா. அலெக்சாந்தர்,
உண்மை குலாபிமானி, கொளும்பு.

## கமிஷன் விசாரணை,

கமிஷன் விசாரணை என்பது இந்திய தேசிய காங்கிரசைப் போல் மற்றொரு ஏமாற்றுந் திருவிழாவே யொழிய தேசத்திற்கோ கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஏழை மக்களுக்கோ விடுதலையோ முன்னேற்றத்தையோ கொடுக்கக்கூடியதல்லவென்றே சொல்லுவோம். அப்படி ஏதாவது கொடுக்கக்கூடிய சக்தி அதற்கு இருக்குமானால் அது இங்குள்ள இந்திய சட்டசபைப் பிரதிநிதிகளையும் மாகாண சட்டசபைப் பிரதிநிதிகளையும் உதவியாய்க் கொள்வதாலோ அல்லது படித்தவர்கள் என்போர்களையும் பெரிய உத்தியோகம் பார்த்த அனுபோகஸ்தர்கள் என்பவர்களையும் பார்ப்பனர்களையும் பணக்காரர்களையும் தேசிய தலைவர்கள் என்பவர்களையும் விசாரிப்பதாலோ இந்தியாவின் குறைகளை அறிந்து ஒருகாலமும் எவ்வித நன்மையும் செய்ய முடியாது என்றே சொல்லுவோம். வைதீகப்பார்ப்பானைக் கூப்பிட்டு சாட்சி விசாரித்தால் மனுதர்ம சாஸ்திரமும் வருணாசிரமமும் தான் இந்தியாவுக்கு விடுதலையும் செல்வமும் மோட்சமும் கொடுக்கத்தக்கது என்று சொல்லுவான். படித்தபார்ப்பானைக் கூப்பிட்டு சாட்சி கேட்டால் அவன் தனக்கும் தன் மக்களுக்கும் தன் இனத்தானுக்கும் மாத்திரம் உத்தியோகம் கிடைக்கும் படியான மார்க்கம் சீர்திருத்தத்தில் செய்துகொடுத்தால்தான் இந்தியாவுக்கும் இந்திய மக்களுக்கும் வெள்ளைக்காரர்களுக்கும் முறையே சுயராஜ்யமும் க்ஷேமமும் உண்டாகும் என்று சொல்வான்

படித்த பார்ப்பனரல்லாதாரைக் கூப்பிட்டு விசாரித்தால் அவன் எல்லா உத்தியோகமும் பார்ப்பனர்களுக்கே போய்விடாமல் பார்ப்பனரல்லாதாருக்கும் கொஞ்சமாவது கிடைக்கும் மார்க்கம் செய்தால் தான் இந்தியாவுக்குச் சம சுதந்திரம் வந்துவிடுமேயொழிய வேறில்லை என்று சொல்வான். பணக்கார பார்ப்பனரல்லாத முதலாளிகளை விசாரித்தால் தங்கள் வியாபாரமும் இயந்திரத் தொழில் சாலைகளும் செல்வமும் பெருகும் படி செய்தால் தான் இந்தியர்களுக்கு நல்ல காலமுண்டாகும் என்று சொல்வான். ஜமீன்தாரை விசாரித்தால் ஜமீன்களுக்குக் கட்டுப்பட்டு ஜனங்கள் நடக்கும் நிர்ப்பந்தம் செய்து ஜமீன்தாரர்களே இந்திய மக்களுக்கு தலைவர்களாயிருக்கத்தக்க மார்க்கம் செய்தால்தான் உலகம் க்ஷேமமடையும் என்று சொல்லுவான். எனவே இந்த நிலையில் தீண்டக்கூடாத மனிதன் என்பவனுக்கோ கூலிக்காரன் என்பவனுக்கோ தொழிலாளி என்பவனுக்கோ ஏழைக் குடியானவன் என்பவனுக்கோ சாதாரண மனிதன் என்பவனுக்கோ இந்த கமிஷனால் என்ன காரியம் சாதிக்க முடியும் என்றாவது அல்லது இவர்களின் அனுகூலத்தை கவனிக்க இன்ன அரசியல் தலைவனோ இன்ன உத்தியோகஸ்தனோ இருக்கிறான் என்றாவது அல்லது இவைகளில் இன்னதை சாக்ஷி ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றாவது யாராவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றோம். ஆகவே 'காட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்கு புல் செதுக்கும் வேலை மாறாது' என்கிற பழமொழிபோல் இந்த அரசாங்கத்தினிடமும் இந்த அரசியல் கிளர்ச்சி மூலமும் யாதொரு உண்மையான பொது நன்மையும் உண்டாகாதென்றே சொல்லுவோம். உண்மையை உணர்ந்தால் இந்தக் கமிஷனும் இந்தக் கிளர்ச்சியும் வெள்ளைக்காரன் ஒரு பக்கமும்—பார்ப்பனனும் படித்தவனும் பணக்காரனும் மற்றொரு பக்கமுமாக இருந்துகொண்டு பொதுமக்களை ஏமாற்றிப் பிழைக்கச் செய்துகொள்ளும் சதியாலோசனை ஒப்பந்தமே யல்லாமல் இதில் சத்தியமோ யோக்கியமோ நாணயமோ ஏதாவது கடுகளவு இருக்கின்றதாக யாராவது விரல்விட முடியுமா என்று கேட்கின்றோம். இவ்விரு ஒப்பந்தக் காருக்குள் விவகாரம் இருப்பதும் சண்டை வருவதுமாய் காண்பதும் எல்லாம் அவரவர்கள் ஆசைப்படும் அதிகப் பங்குச் சண்டையே ஒழிய, பொது நன்மையைப் பொறுத்த சண்டையல்லவென்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டுமென்று வேண்டுகிறோம். யோசித்துப் பார்க்கும்போது கஷ்டப்படுகின்ற மக்கள் அதாவது சமுதாய விஷயத்திலும் சுயமரியாதை விஷயத்திலும் உத்தியோக விஷயத்திலும் கொடுமை யடைந்து வருகின்றவர்கள் தங்கள் தங்கள் குறைகளை தாராளமாக வெளியிட வேண்டியது அவசியமானதாகவே புலப்படும்.

இவ்விஷயங்களில் கஷ்டப்படுகிறவனுக்கு பிரதிநிதியாய் அவனால் சுகப்படுகின்றவனை ஏற்றுக் கொள்ளுவது எலிக்கூட்டத்திற்கு பூனையை அரசாக்கிக் கொள்வதாகுமேயொழிய வேறில்லை. தாழ்ந்த ஜாதியார் என்னும் தீண்டாதாருக்கு உயர்ந்த ஜாதி என்னும் வருணாசிரமக்காரன் பிரதிநிதியாவதும், ஏழைக் குடியானவனுக்குப் பதினாயிரக்கணக்கான வேலி நிலமுடைய மிராசுதாரன் பிரதிநிதியாவதும், படிக்காத வகுப்புக்குப் படித்த வகுப்பார் பிரதிநிதியாவதும் தொழிலாளிக்கு முதலாளி வர்க்கம் பிரதிநிதியாவதும், உத்தியோகம் சரிசமமாய் இல்லை என்கின்ற வகுப்புக்கு ஏகபோகமாய் உத்தியோகம் அனுபவிக்கும் வகுப்பு பிரதிநிதியாவதும் நீதியானால், இந்தியர்களுக்கு வெள்ளைக்காரன்தான் அரசனாயிருக்க முடியும், இருந்தாகவேண்டுமென்பதை ருஜுப்படுத்துகின்றது. ஆதலால் மறுபடியும் நாம் சொல்லுவதென்னவென்றால் கஷ்டப்படும் மக்கள் ஒன்றுசேர்ந்து தங்கள் தேவைகளை நிர்ணயிக்கவும் அதை அடையவும் சகலவித வழிகளையும் உபயோகப் படுத்துவதில் கஷ்டமறியாத மக்களையும் பிறர் கஷ்டத்தில் வாழும் மக்களையும் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பதையும் அவர்களை பின்பற்றக் கூடாது என்பதையும் நாம் குறிப்பிடுகின்றோம். 'தி.ன்'

இறந்தவர்களை திருப்தி செய்ய

**பார்ப்பனர் வயிற்றை**

நிரப்பாதே.

## சங்கராச்சாரியார் லோக குருவா?

அழுகி நாற்றமெடுத்துப்போன வருணாசிரம தர்மத்திற்குத் தலையாக விளங்கும் சங்கராச்சாரியார் என்பவர் ஸ்மார்த்தப் பார்ப்பன சந்நியாசியாய் சிருங்கேரி கும்பகோணம் முதலிய சில இடங்களிலே உள்ள ஸ்மார்த்த மடத்திற்குத் தலைவராய் ஸ்மார்த்தமதப்படி தெய்வங்களுக்குப் பூசை செய்து கொண்டிருக்கின்றவர். இவர் ஒருவருக்கும் மத சம்பந்தமான தீட்சை செய்வதில்லை. சைவ மடங்களிலே சிவ தீட்சை செய்வது போலவும், வைணவ மடங்களிலே முத்திரா தாரணஞ் செய்வதுபோலவும், மாத்துவ மடங்களிலே உபதேசம் செய்வது போலவும் ஸ்மார்த்தருக்குசமயப் பிரவேசத்தைக்காட்டும் ஒரு கிரியையாவது ஒரு உபதேசமாவது சங்கராச்சாரியர் செய்வதாகத் தெரியவில்லை. ஒரு மதத்தின் முக்கியமான உபதேசத்தைச் செய்கின்றவர் குரு எனப்படுவர். ஸ்மார்த்த மதத்தில் ஒவ்வொரு பிராமணனுக்கும் அவரவர் தகப்பனாரே காயத்திரி உபதேசஞ் செய்கிறதாகத் தெரிகிறது. பூணூல் அணிதலே ஸ்மார்த்த சமயப்பிரவேசக்கிரியை. இவற்றிற்கும் சங்கராச்சாரிக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. ஆனால் சங்கராச்சாரி மடமும் அதன் சொத்துக்களும் ஸ்மார்த்தப் பார்ப்பனருக்கே பெரிதும் பயன்படுகிறது.

ஸ்மார்த்த மதத்தைத் தவிர இந்திய நாட்டிலே விளங்குகின்ற சைவ சமயம், வைணவ சமயம், மாத்துவ சமயம், புத்த சமயம், சமண சமயம் முதலிய பல சமயங்களுக்கும் ஆசிரியரும், சீடரும், உபதேசங்களும் வெவ்வேறு. இவற்றிற்கும் சங்கராச்சாரிக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. இப்படியிருக்க விபூதி யணிகிற ஒரு காரணத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு சைவர்களிற் சிலர் சங்கராச்சாரியை சைவ மதத்திற்கு உரியவர் என்று பிழைபட எண்ணி அவருக்குத் தங்கள் பொருளையெல்லாம் வீணாகச் செலவழித்து ஏமாந்து போகின்றனர். என்ன அறியாமை! ஒவ்வொரு மதத்தவரும் தத்தங்குருமார்களை அபிமானம் பற்றி லோக குரு என்று சொல்லுவது உபசாரமேயன்றி உண்மையல்ல. ஸ்மார்த்தமடத் தலைவராகிய சங்கராச்சாரி மத உபதேசம் பண்ணுகிற ஸ்மார்த்த குருவுமல்ல எல்லாச் சமயங்களுக்கும் எல்லாச் சாதியாருக்கும் உள்ள லோககுருவுமல்ல. அப்படிப்பட்ட லோககுருவே உலகத்தில் கிடையாது. பாமர மக்களிடம் 'உலக குரு, மதகுரு' என்ற போலி வார்த்தைகளைக் கூறி வயிறு வெடிக்கப் பிடுங்கித்தின்னும் நமது போலி லோககுருவின் மகிமைகளை பொது மக்களே அறியும்படி விட்டு விடுகிறேன்.

ராவணதாசன்

"அறிவு விளக்கம்"
ஓர் மாதாந்திரப் பத்திரிகை
வருட சந்தா தபாற்கூலி உள்பட 6 அணா-
மாதிரிப்பிரதி இனாம்.
'அறிவுவிளக்கம்' ஆபீஸ், உடுமலைப்பேட்டை.

# இந்திய சட்ட சபை முடிவு.

இந்திய மக்களுக்கு, காங்கிரசு எவ்வளவு தூரம் பிரதிநிதித்துவம் உடையது என்பதைப்பற்றியும், சட்ட சபைகள் எவ்வளவு தூரம் பிரதிநிதித்துவம் உடையது என்பதைப் பற்றியும், இவைகளில் உள்ள தலைவர்கள் என்போர்களும் அங்கத்தவர்கள் என்போர்களும் எவ்வளவு தூரம் பிரதிநிதித்துவம் உடையவர்கள் என்பதைப்பற்றியும் நாம் பொது மக்களுக்கு அதிகமாய் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

சாதாரணமாக காங்கிரசு என்பது பார்ப்பனர்களுடையவும் படித்த சிலருடையவும் நன்மைக்காக அதாவது உத்தியோகமும், பிழைப்பும் பெறுவதற்காக ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சங்கம் என்பதாக நாம் பல நாளாக சொல்லிக்கொண்டே வந்திருக்கிறோம். அதுபோலவே சட்ட சபை முதலியவைகளில் அங்கம் பெறவும் அது சம்பந்தமான தேர்தல்களில் ஏழைகளை பாமர மக்களை நாணயக் குறைவான காரியங்களால் ஏமாற்றி சுபகத்திற்காக ஸ்தானம் பெறவும் ஆனஸ்தாபனங்கள் என்றும் சொல்லிவந்திருக்கிறோம். இவற்றை இதுவரையில் எவரும் மறுத்ததில்லை. ஸ்ரீமான் காந்தியும் இவைகளை ஒப்புக்கொண்டு பாமர மக்களுக்கு அறிவு வரும்வரை இப்படித்தான் ஏமாற்றப்பட்டு வரக்கூடும் என்று சொன்னாரே யல்லாமல் பாமரமக்களுக்கு அறிவுஉண்டாக்கும்விஷயத்தில் ஒருசிறிதுமுயற்சியும் எடுத்துக்கொண்டவரல்ல. எனவே மகாத்மா என்றவர்களெல்லாம் பாமர மக்களின் அறிவில்லாத் தன்மையை உபயோகித்துக்கொள்ளாமல் இருக்க முடியாமலும் பாமர மக்களுக்கு அறிவுறும் மார்க்கத்தைச் செய்ய முடியாமலும் தலைவர்களாக இருந்து வரும்போது மற்றவர்களைப்பற்றி நாம் சொல்லுவது வீண் வேலையாகும்.

தேசியத் தலைவர்கள் என்கின்ற முறையில் இந்தியாவுக்கு சுயராஜ்யத் திட்டம் வகுக்க அநேக கூட்டங்கள் கூடியாகிவிட்டது. ஆகிலும் இந்தியா சுயராஜ்யத்திற்கு எவ்வளவு தூரம் அருகதை உடையது என்பதை அறிவதற்காக பார்லிமெண்டாரால் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கும் சமயத்தில இந்தியாவுக்கு வேண்டியதை அதனிடம் தெரிவித்துக்கொள்வது இந்தியாவின் சுயமரியாதைக்கு அழகல்ல என்று சொல்லிக்கொண்டு தாங்களாக பல பல திட்டம் போட்டுக்கொண்டு வருகிறார்கள். எனவே இவர்கள் இந்த திட்டத்தை என்ன செய்யப்போகிறார்கள் என்பதை சற்று யோசித்தால் இதன் புரட்டு இன்னது என்பது மக்களுக்கு விளங்காமல் போகாது.

இவர்கள் போடும்திட்டம் காங்கிரஸ் மூலமோ, சட்ட சபைகள் மூலமோ, அல்லது தனித் தனி நபர்களின் சொந்த ஹோதாவின் மூலமோ, அல்லது சர்வ கக்ஷி மகாநாடு என்பதன் மூலமோ, பார்லிமெண்டுக்கு அனுப்பியோ; அல்லது அறிவித்தோதான் அதன் பலன்களை எதிர் பார்க்க வேண்டுமே யல்லாமல் திட்டம் போட்ட ஸ்தாபனங்களோ திட்டம் போட்ட ஆசாமிகளோ 'இனிமேல் இந்தப்படியே ராஜீகம் நடைபெற்று வரக்கடவது'' என்று வெளிப்படுத்திவிட்டால் அந்தப்படி அனுபவத்தில் நடக்கப் பெற்றுவிடுமா என்று கேட்கின்றோம்.


சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை என்பது போல் சுய அறிவு இல்லாதவர்களும் அரசியல் பிழைப்புக்காரரும் ஏமாற்றி வாழும் சில மக்களும் சேர்ந்துகொண்டு கமிஷன் பஹிஷ்காரம் கமிஷன் பஹிஷ்காரம் என்று கத்துவதால் சகலகாரியமும் சரிப்பட்டுப் போகுமா என்று கேட்கின்றோம். சர்வகட்சி மகாநாட்டின் பேரால் சீர்திருத்த திட்டம் என்பதாக ஸ்ரீமான்கள் சாப்ரூ மாளவியா, சீனிவாசய்யங்கார் முதலியவர்கள் சில திட்டங்களை தனித்தனியாய் பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கிறார்கள். அதிலுள்ள முக்கிய விஷயமும் ஒற்றுமையான விஷயமும் ஒன்றே ஒன்றுதான். அது என்னவென்றால் மகமதியர்களுக்கு தனித்தொகுதி அதாவது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கக்கூடாது என்பதுதான். இந்த திட்டம் குறிப்பிட்ட தலைவர்கள் என்பவர்கள் மூவரும் பார்ப்பனர்கள். இவர்களுக்கு இப்போது உள்ள கவலையெல்லாம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுக்கக் கூடாதென்பதும்மகமதியர்களுக்குவழங்கப் பட்டிருப்பதையும் பிடுங்கிக்கொள்ளவேண்டும் என்பதுமே தவிர வேறில்லை. இதற்காக இதுவரை சுமார் நூற்றுக்கணக்காக இந்துமுஸ்லீம் ஒற்றுமை மகாநாடும், சர்வகட்சி மகாநாடும் ஒழுங்குத்திட்டங்களும் போட்டாய்விட்டது. ஒன்றும் பலித்தபாடில்லை, சர்வகட்சி மகாநாட்டிற்கு சென்றிருந்த ஸ்ரீமான் ராமசாமி முதலியாரால் ஒரு காரியமும் செய்ய முடியாமல் போனாலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் (தனித்தொகுதி தேர்தல்) அவசியம் இருக்கவேண்டுமென்று சொல்லிவிட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. யார் சொன்னாலும் லக்ஷியம் செய்யாமல் எல்லோரையும் லஞ்சம் கொடுத்தாவது ஏமாற்றி வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஒழிக்கவேண்டியதைத் தவிர பார்ப்பனர்களுக்கு வேறு கதியில்லை. சைமன் கமிஷன் பஹிஷ்காரத்தின் தத்துவமே இதுதான். தவிர ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரின் தனித்திட்டத்தில் மற்றொரு விஷேசம் இப்போது புதிதாகக் காணப்படுகின்றது. அதாவது மாகாண நிர்வாகங்களைப்பற்றிய முழு அதிகாரமும் இந்திய சட்டசபைக்குத் தான் இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அநேகம்பேர் அநேக நாளாக ஸ்ரீமான் சி. ஆர். தாஸ் முதற்கொண்டு மாகாண சுயஆட்சி (புரொவன்ஷியல் அட்டானமி) கொடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்க பல அரசியல் மகாநாடுகளும் தீர்மானித்திருக்க இப்போது ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் மாகாண நிர்வாக அதிகாரம் இந்திய சட்டசபைக்கு இருக்கவேண்டும் என்று சொல்லவேண்டிய அவசியமென்ன என்பதைப்பற்றியும் அதுவும்இந்தியாவுக்கு அரசியல் விசாரணைக்கமிஷன் வந்திருக்கும் சமயம் இப்படிச் சொல்லவேண்டிய அவசியமென்ன என்பதைப்பற்றியும் யோசித்துப் பார்த்தால் விளங்காமல் போகாது.

என்னவென்றால் சென்னை மாகாணத்தில் உள்ள மக்களைப்பற்றி பார்ப்பனர்களுக்கு இருந்த நம்பிக்கை போய்விட்டது. சென்னை மாகாண பார்ப்பனரல்லாத மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி பரவத்தக்க வேலைகள் நடந்து வருகின்றது. வயிற்றுச் சோற்று தேசபக்தர்களாக இருக்கும் இரண்டொருவரைத்தவிர மற்றவர்களை இனி ஏய்க்கமுடியாது என்கின்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. பார்ப்பனருடன் இருந்து வந்த பார்ப்பனரல்லாதார் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய் உணர்ந்து, ஸ்ரீமான்கள் வரதராஜுலு கந்தசாமி செட்டியார், குழந்தை குப்புசாமி முதலியார் அண்ணாமலை முதலியார் ஷாபி மகமது சாயபு போன்ற சில நிர்ப்பந்தமுடைய ஆசாமிகள் தவிர மற்றவர்கள் எல்லாம் அவர்களைவிட்டு வெளிப்பட்டு விட்டார்கள். இந்த கனவான்கள் தங்களுடன் இருப்பதாலும் தங்களுக்கு ஒரு நன்மையும் உண்டாவதாக தெரியவில்லை, அன்றியும் சென்னை மாகாணமானது, ஆந்திரமாகாணம், தமிழ்மகாணமென இரண்டு பிரிவாய்ப்பிரிக்கப் படபோவதாகவும் அவர்களுக்குதெரியவருவதால் சுத்த சுத்தமாக நம்பிக்கை போய்விட்டது. ஆதலால் தமிழ் நாட்டு நிர்வாக அதிகாரம் மாகாண சட்டசபையில் இருக்கக்கூடாதென்றும் இந்திய சட்டசபைக்கு இருக்கவேண்டும் என்றும் சொல்லவேண்டிய நிலைக்கு பார்ப்பனர்கள் வந்து விட்டார்கள். இதிலிருந்தே இந்திய சட்ட சபைப் பார்ப்பன ஆதிக்கத்திற்குத் தக்கதாயிருக்கின்றது என்பது நன்கு விளங்கவில்லையா என்பதை யோசித்தால் விளங்காமல் போகாது.

தவிரவும் இந்திய சட்டசபையில் இது சமயம் தமிழ் நாட்டு பிரதிநிதிகளாய் உள்ளவர்கள் யார் என்பதைப் பார்த்தால் ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரைத் தவிர எல்லோரும் ஐயங்கார்கள் ஸ்ரீமான்கள் ஏ. ரங்கசாமி அய்யங்கார், எம். கே. ஆச்சாரியார், சீனிவாசய்யங்கார், துரைசாமி அய்யங்கார். சேஷய்யங்கார் ஆகிய அய்யங்கார் 'சுவாமி' களாகவே இருக்கிறார்கள். ஆர். கே. ஷண்முகம் செட்டியார் பார்ப்பனர் கூட இருந்து கோவிந்தா போட்டதால்தான் அங்கு போக முடிந்தது இந்த பிரபுக்கள் உள்ள கூட்டத்தில் சைமன் கமிஷனைப் பகிஷ்கரித்து தீர்மானம் செய்வது அதிசயமல்ல. ஸ்ரீமான் எம். சி. ராஜா அங்கிருக்க நேர்ந்ததும் உள்ள நிலைமையை எடுத்துச்சொல்ல இடம் கிடைத்ததும் பார்ப்பனதாசராய் இல்லாமல் சர்க்கார் தயவு பெற்றதால் தான். அப்படி இருந்தும் அவர் தனது சமூகத்தைப்பற்றி கொஞ்சம் பேச ஆரம்பித்த உடனே ஸ்ரீமான் "எம். சி. ராஜா எங்கள் பிரதிநிதி அல்ல" என்று சில வரதராஜுலுக்களையும் சாம்பசிவங்களையும் பிடித்து தந்தி தருவித்து விளம்பரம் செய்துவிட்டார்கள். ஆதலால் இப்போதாவது

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க.



ஆனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு பிரபவ ஸு மாசி மீ 14 உ

# நம் நாட்டுக்கு வேண்டியது என்ன?

## அரசியல் திருத்தமா? சமூக திருத்தமா?

இந்த சமயம் தமிழ் மக்கள் மிகவும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியதும் கூர்மையாய் கவனித்து நடக்க வேண்டியதுமான நெருக்கடியான சமயம் என்பதை நாம் பல தடவை அடுத்து அடுத்து வெளியிட்டு வந்திருக்கிறோம். இம்மாதிரியான சந்தர்ப்பங்கள் அடிக்கடி ஏற்படாது, 10 வருஷங்களுக்கு ஒரு முறையோ 20 வருஷங்களுக்கு ஒரு முறையோதான் ஏற்படுகின்றது. அதை தக்க வழியில் உபயோகித்துக் கொள்ள முடியாமல் பார்ப்பனர்கள் கொடுமைசெய்து வருவது ஒருபக்கமிருந்தாலும் பார்ப்பனரல்லாதார்களில் அரசியல் பிழைப்புக்காரரும் கோடாரிக் காம்புகளும் முடத்தெங்குகளும் மற்றொரு பக்கமும இருந்து கொண்டு நாடு முழுதும் பாழாகும் வண்ணமும் சமூகம் முழுவதும் இழிவுபடும் வண்ணமும் துரோகச் செயல்கள் செய்து வருகின்றார்கள். ஆதலால் பார்ப்பனரல்லாத மக்கள் இதுசமயம் முக்கியமாய் விழித்திருக்க வேண்டியதாய் இருக்கின்றது.

நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆக வேண்டிய காரியங்களைப்பற்றி விசாரிப்பதற்கென்றே எவ்வகை சீர்திருத்தம் வழங்க வேண்டுமென்பதை அறியவோ இதுசமயம் ஒரு கமிஷன் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டு இருக்கிறது. இதை தக்க வழியில் உபயோகித்துக்கொள்ள வேண்டியது மக்களின் முக்கிய கடமை. எனவே இப்போது வந்திருக்கும் இந்த கமிஷனிடம் நமது நிலைமைகளையும் தேவைகளையும் சொல்லிக் கொள்வது எவ்வழியிலும் இழிவானதாகாது. ஆதலால் இப்போது நமது நிலை என்ன நமக்கு இப்போது வேண்டியது என்ன? சுயமரியாதையும் ஒற்றுமையுமாகவல்ல சமூக சீர்திருத்தமா அல்லது நாட்டை இழிவுபடுத்தி பிரித்து வைக்கும் அரசியல் திருத்தமா என்பதுதான் முக்கியமானகேள்வி. அரசியல் சீர்திருத்தம் என்பது நமக்கு இரண்டுமூன்று தடவை வழங்கப்பட்டாய்விட்டது. அதனால் எதிர்பாராத பதவிகள் எல்லாம் நமக்கு கிடைத்திருக்கின்றது. மாதம் 5500 ரூ 6500 ரூ. 7500 ரூ. கிடைக்கும்படியான உத்தியோகங்கள் கிடைத்துவிட்டன. அதுவும், தெருவில் பிச்சை எடுத்தும் பஞ்சாங்கம் சொல்லி பணம் பறித்தும் முனிசிபாலிட்டி விளக்கு வெளிச்சத்தில் படித்தும் வந்தவர்களுக்கு உயர்தர நீதிபதி பதவியும் நிர்வாக பதவியும் கிடைக்கத்தக்க சீர்திருத்தம் வழங்கப்பட்டு இருக்கின்றது. பிரபு பட்டமும் கவர்னர் பதவியும் கிடைத்திருக்கின்றது. இனி நமக்கு கிடைக்க வேண்டிய பதவி இன்னது பாக்கி இருக்கின்றது என்று சொல்ல மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அரசர் பதவியும் அரச பிரதிநிதி பதவியும் சேனாபதி பதவியும்தான் இனி பாக்கி இருக்கின்றது என்பது நமது அபிப்பிராயம், ஆனாலும் இதுவரை நமக்கு கிடைத்த மேல்கண்ட பதவிகளை நாம் உபயோகமற்றதென்றுசொல்லி தள்ளிவிடவும்இல்லை. ஒருவர்மேல் ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு அதை அடைய முயற்சிக்கின்றோமே யொழிய அடைந்து வருகின்றோமே ஒழிய வேண்டாமென்று ஒருவரும் சொல்லவே இல்லை. அவைகளை எந்த அரசியல் இயக்கமும் தள்ளவும் இல்லை. இந்த நிலையில் நாடு என்ன முன்னேற்ற மடைந்திருக்கிறது என்று கேட்கின்றோம்? ஒரு சமயம், பதவியும் சம்பளமும் மாத்திரம் கிடைத்ததேயல்லாமல் அதற்கேற்ற அதிகாரம் கிடைக்கவில்லை என்று யாராவது சொல்லக்கூடுமா? நீதிபதி அதிகாரங்களில் நம் நாட்டு மக்களின் சகல சொத்துக்களைப் பற்றியும் அவர்களது உயிரைப் பற்றியும் நீதி வழங்கத்தக்க அதிகாரம் கொடுக்கப் பெற்றிருக்கின்றோம். அது மாத்திரமல்ல. இந்த நீதியை மக்களுக்கு வாங்கிக் கொடுப்பதற்கு பாடு படுகின்றவர்களுக்கும் மீ ஒன்றுக்கு கபர் ஒன்றுக்கு 50000 ரூபாய் 100000 ரூபாய் வரையிலும் கூட வரும்படி சம்பாதிக்கத்தக்க நீதி வழங்கும் முறைகளையும் நீதி அடையும் முறைகளையும் கொடுக்கப் பெற்றிருக்கின்றோம். அந்நீதிகள் இன்ன விதம் இருக்க வேண்டுமென்று சட்டம் ஏற்படுத்தும் பொறுப்பும் நமக்கே கொடுக்கப்பட்டிருப்பதுடன் சட்ட சட்ட நிருமாண சபைகள் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அவைகளும்உபயோகமற்றவையென்று யாராலும் வெறுத்துத் தள்ளிவிடப்படவும் இல்லை. இந்தியாவில் உள்ள எல்லாவிதமான அரசியல் தலைவர்களும் இந்த சட்ட நிரூபண சபைகளில் இன்றும் உட்கார்ந்துகொண்டு சட்டமியற்றிக் கொண்டு இருக்கின்றார்கள். அதுவும் தங்களது சொந்த ஓதாவல அல்லாமல் சீர்திருத்தத்தின் மூலம் ஏற்பட்ட நியதிப்படி பொது ஜனங்களின் வாக்குப் பெற்று பொது ஜனங்களின் பிரதிநிதிகள் எனகின்ற முறையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்க சபை தவிர மற்ற 7, 8 மாகாண சட்டசபைகளிலும், இந்திய சட்ட சபைகளிலும் ஜனப்பிரதிநிதிகளே அதிக எண்ணிக்கை இருக்கத்தக்க விதமாகவே அமைக்கப் பட்டிருக்கிறது. அதுவும் சர்க்காரை தோற்கடிக்கத் தக்க அதிகப்படிக்கான எண்ணிக்கையாகவே இருப்பதுடன் பல தடவை சர்க்கார் தோற்கடிக்கப்பட்டும் இருக்கிறது.

நீதி இலாக்கா சட்ட சபை இலாக்கா மாத்திர மல்லாமல் நிர்வாக இலாக்காவிலும் நமக்கு அதிக எண்ணிக்கை வழங்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக சென்னையை எடுத்துக் கொள்வோம். நிர்வாக சபையில் ஏழு மெம்பர்களும் ஒரு தலைவரும் இருப்பதாக வைத்துக்கொண்டால் அதில் ஐந்து பேர் இந்தியர்களாகவே இருக்கத் தக்க மாதிரி இருக்கின்றது.

இந்த ஐவர்களிலும் மூன்று பேர் ஜனப் பிரதிநிதிகள் என்பவர்களின் நம்பிக்கையை பெற்றே இருக்கத் தக்கவண்ணம் அமைக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற இருவர்களும் இந்தியப் பிரமுகர்களாகவே நியமிக்கப்படத் தக்கதாயிருக்கின்றது. அந்தப்படியே நியமிக்கப் பட்டும் வருகிறது. அந்தப்படி நியமனம் பெறுகின்றவர்களும் சுதந்தரமாய் நடந்துகொள்வதற்கில்லாமலும் கண்ணியமாய் நடக்கத்தக்க மாதிரியாகவும் மீ 5500 ரூபாய் சம்பளமும் மீ சுமார் 1500 ரூபாய் படித்தாமும் பெறும்படியான சவுகரியங்களும் அமைக்கப்பட்டு இராஜபோகமும் கொடுக்கப்பட்டு அந்தப்படியே அடைந்தும் வருகின்றார்கள்.

இந்திய ஜனப் ப்ரதிநிதித்வம் கொண்ட இவ்வளவும் அரசியல் ஸ்தாபனங்கள் என்பது மூலமாய் கேட்டுக்கொண்டதற்கு இணங்கியே அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்டதாக இருக்கின்றதே யல்லாமல் வேறல்ல. எனவே இவைகளினால் நாட்டிற்கோ நாட்டிலுள்ள பற்பல ஜனசமூகங்களுக்கோ ஏற்பட்ட நன்மைகள் என்ன? ஏழைகளுக்கு ஏற்பட்ட நன்மைஎன்ன? விவசாயிகளுக்கு ஏற்பட்ட நன்மை என்ன? கூலிக்காரருக்கு ஏற்பட்ட நன்மை என்ன? வியாபாரிகளுக்கு ஏற்பட்ட நன்மை என்ன? தொழிலாளிக்கு ஏற்பட்ட நன்மை என்ன? என்று கேட்கின்றோம்.

ஏழைகளுக்கு ஏற்பட்ட நன்மையின் யோக்கியதைக்கு பிச்சைக்காரர்களின் தொல்லையும் ஒழுக்கக் குறைவுகள் அதிகப்படுவதும் போதிய சாக்ஷியாகாதா என்று கேட்கின்றோம்.

விவசாயக்காரர்களுக்கு ஏற்பட்ட நன்மையின் யோக்கியதைக்கு பூமிகள் எல்லாம் ஒவ்வொரு தனி மனிதனுக்கே அதுவும் விவசாயம் செய்யத் தெரியாதவனுக்கே போய்ச்சேர்ந்து வருகின்றதும் விவசாயிகள் அவர்களுக்கு உழைத்து பட்டினி கிடப்பதும் போதிய சாக்ஷியாகாதா என்று கேட்கின்றோம்.

கூலிக்காரர்களுக்கு ஏற்பட்ட நன்மையின் யோக்கியதைக்கு தூத்துக்குடி, மண்டபம்,

நாகபட்டணம், சென்னை, காகிநாடா முதலிய துறைமுகங்களில் தங்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் வாரம் ஒன்றுக்கு பதினாயிரக்கணக்கான மக்கள் கூலிக்காரர்களாக கப்பல் ஏறுகின்ற காக்ஷி போதாதா என்று கேட்கின்றோம்.

தொழிலாளிகளுடைய நன்மையின் யோக்கியதைக்கு திடீர் திடீர் என்று ஆயிரக் கணக்கானபதினாயிரக் கணக்கான தொழிலாளர்களை முதலாளிமார்கள் வேலையிலிருந்து தள்ளுவதும் அவர்களது வேலைகளை இயந்திரங்களைக் கொண்டு சரி செய்து கொள்வதும் அத்தொழிலாளிகள் தெருத் தெருவாய் திண்டாடுவதும் மீ 100 ரூ. வரும்படி பெற்ற தொழிலாளி கூலி போதாது என்று கேட்டதற்கு நீக்கப்பட்ட நிமித்தம் ஒற்றை மாட்டுவண்டி ஓட்டுவதும் பால் கறந்து விற்பதுமான வேலையில் கூட ஜீவனம் செய்ய முடியாமல் திண்டாடுவதுமான நிலைமை போதாதா என்று கேட்கின்றோம்.

மற்படி நாடு முன்னேற்ற மடைந்தது என்பதற்கு சாக்ஷியாக மக்களின் அரசாங்க நிர்வாகச் செலவுக்காக வரிவசூலிப்பது வருஷத்திற்கு வருஷம் விஷம் ஏறுவதுபோல வருஷம் ஒன்றுக்கு 40 கோடியிலிருந்து, 165 கோடி ரூபாயாக உயர்ந்திருப்பதும், நாட்டிலிருந்து வியாபாரத்தின் மூலம் வருஷத்திற்கு வருஷம் மேல்கண்டபடியே கோடிக்கணக்கான ரூபாய்கள் உயர்ந்து கொண்டே வெளிநாடுகளுக்கு போய்க்கொண்டு இருப்பதும் எங்கு பார்த்தாலும்படித்த மக்கள் முதற்கொண்டு வேலையில்லாமல் திண்டாடுவதும் போதாதா என்று கேட்கின்றோம்.

வியாபாரிகள் நிலைக்கு சாக்ஷியாக நாணய மாற்றுதல் மூலமாகவும் வருமான வரி மூலமாகவும், பத்துலக்ஷக் கணக்கான ரூபாய்களுக்கு வருஷா வருஷம் நூற்றுக் கணக்கான பெரிய பெரிய வியாபாரிகளும் இயந்திர சாலைகளும் தீபாவளி ஆகிவருவது போதாதா என்று கேட்கின்றோம்.

நாடு ஒழுக்கத்தில் முன்னேறியிருக்கின்றது என்கின்ற யோக்கியதைக்கு சாக்ஷியாக கோர்ட்டுகளும் நியாயாதிபதிகளும் நியாயவாதிகளும் காவலாளிகளும் நிர்வாக ஸ்தாபனங்களும் ஜெயில்களும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போவது போதாதா என்று கேட்கின்றோம்.

சமூக ஒற்றுமையின் யோக்கியதைக்கு சாக்ஷியாக நாளுக்கு நாள் இந்து முஸ்லீம் கலவரங்களும், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் விவாதங்களும், கீழ் ஜாதி மேல் ஜாதி தொல்லைகளும், புதிய புதிய வகுப்பு உரிமைகளும் வளர்ந்துகொண்டு போவதும் போதாதா என்று கேட்கின்றோம்.

நாடு அரசியல் அறிவுபெற்றிருக்கும் யோக்கியதையை அறிய சாக்ஷியாக எலக்ஷன் கஷ்டங்களும் விவகாரங்களும் வேற்றுமை விரோதங்களும் போதாதா என்று கேட்கின்றோம.

சமூக முன்னேற்றமடைந்திருப்பது என்பதின் யோக்கியதையை அறிய கேவலம் மனிதனுக்கு மனிதன் தொட்டால் பாவம் பார்த்தால் பாவம் என்பதை ஒழிப்பதில் உள்ள கஷ்டங்களும காங்கிரசில் இருந்த தீண்டாமைத் திட்டமும் மனித சமத்துவத் திட்டமும் எடுத்தெறியப்பட்டிருப்பதும் வீதியில் நடப்பதற்கும் பள்ளியில் படிப்பதற்கும் கிணற்றில்தண்ணீர் மொண்டு குடிப்பதற்கும் சுயமாய் ஒப்புக்கொள்ளப்படாமல் சர்க்கார் கோர்ட்டுகளில் நீதி பெற வேண்டியிருப்பதும் பல சந்தர்ப்பங்களில் அங்கும் இந்திய அதிகாரிகளாலேயே இவைகள் மறுக்கப்படுவதும் வருணாசிரம மகாநாடுகள் நடப்பதும் வகுப்பு மகாநாடுகள் பெருகிக்கொண்டு போகவேண்டிய அவசியமேற்படுவதும் போதாதா என்று கேட்கின்றோம்.

நாட்டின் பொது நாகரிக முன்னேற்றத்தின் யோக்கியதையைப்பற்றி அறிவதற்கு சாட்சியாக மிஸ்மேயோ போன்ற நூற்றுக் கணக்கான பேர்கள் எழுதி இருக்கும் புஸ்தகங்களும் அதை நாடக ரூபமாக அன்னிய நாடுகளில் நடத்திக் காண்பிக்கப்படுவதும், இன்னும் பலர் இப்போதும் அம்மாதிரி விஷயங்களில் பிரவேசித்து புஸ்தகமெழுதி பணம் சம்பாதிப்பதும், இவ்வளவுமல்லாமல் மதத்தின்பேரால், கோயில்களின்பேரால், சுவாமிகளின்பேரால் விபசாரப் பெண்கள் உற்பத்தியாவதையாவது தடுக்கவேண்டும் என்கின்ற நிபந்தனைகொண்ட சட்டம் செய்வதில் மதத்திற்கு ஆபத்துவந்துவிடும் என்று மதத்தலைவர்களும் உயர்ந்த ஜாதியார் என்பவர்களும், வாதாடுவதும் அறியாக்குழந்தைகளை பொம்மைக்கல்யாணம் செய்து பெண் ஜாதிபுருஷர்களாக்கி வீட்டிற்குள் தள்ளக்கூடாது என்பதாக சட்டம் ஏற்படுத்த பெண்மணிகள் முயற்சித்தால் அதையும் மதத்தலைவர்களும் உயர்ந்த ஜாதியார் என்பவர்களும் அரசியல் தலைவர்களும்மதத்தின் பேராலும் தேசத்தின் பேராலும் தடுப்பதும், மற்றும் ஒருவரை ஒருவர் தொடுவது பாவம் என்றும் ஒருவர்தொட்ட தண்ணீர்சாப்பிட்டால் நரகம்கிடைக்குமென்றும் ஒருவர் தொழும் இடத்தில் மற்றொருவர் தொழுதால் கடவுள் அருள் போய்விடும் என்றும் ஒருவர் குளிக்கும் இடத்தில் மற்றொருவர் குளித்தால் நதியோ குளமோ கெட்டுப் போகும் என்றும் மதத்தின் பேராலும் கடவுள்கள் பேராலும் நிர்ப்பந்தப்படுத்தி வருவதும் போதாதா என்று கேட்கின்றோம். அன்றியும் இவைகள் முழுதும் ஒழியவேண்டும் என்று யாராவது முயற்சித்தால் அதற்கு நாஸ்திகம் என்றும் தேசத்துரோகமென்றும் பெயர் கொடுத்து அம்முயற்சிகளை ஒழிக்க முற்படுவதும் போதாதாஎன்று கேட்கின்றோம்.

எனவே அரசியல் சீர்திருத்தத்தால் இந்தியர் இந்திய மக்கள் அடைந்திருக்கும் நன்மைக்கு மேல் கண்டவைகளைவிட இனியும் வேறு என்ன உதாரணங்கள் வேண்டும் என்று கேட்கின்றோம். ஆதலால் இனியும் அதிகமான அரசியல் சீர்திருத்தம் கிடைத்தால் இந்தியாவுக்கு என்ன பலனைக் கொடுக்கக்கூடும், இந்தியா என்ன கதியை அடையக்கூடும், என்பவைகளை யோசித்துப் பார்த்தால் உண்மையான இந்தியனுக்கு இப்போது என்னவேண்டும்? அதாவது அரசியல் திருத்தமா? சமூகதிருத்தமா? என்பது பலனாகாமல் போகாது என்று சொல்லுவோம. எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசியல் திருத்தத்தால் நமது நாடு முன்னேற முடியவே முடியாது என்பது இதுவரையில் கிடைத்த அனுபவத்தினாலேயே தெரிந்துகொண்டோம். அன்றியும் எந்நாடும் முதலில் சமூக சீர்திருத்தமும் சமூக ஒற்றுமையும் பெறாமல் அரசியல் சுதந்திரம் பெற்றதாக யாரும் கூறமுடியாது.

தேசியம் என்பது வேறு. அரசியல் என்பது வேறு- என்பதை முதலில் உணர்ந்துகொள்ளவேண்டும். தேசீயம் என்பது தேசமக்களின் சுயமரியாதை முன்னேற்றத்தைப் பொருத்தது. அதைபலர் தப்பாக அர்த்தம் செய்து காட்டி பாமர மக்களை ஏமாற்றி உயிர் வாழ்கிறார்கள். அரசியல்என்பது யார நம்மை ஆள்வது என்கின்றவிஷயமல்ல. நமது மக்களுக்கு எம்மாதிரி அரசியல் முறை இருக்கவேண்டும் என்பதுதான் நமது அரசியல்விஷயமாகும். இப்போதைய அரசியல் வாதிகள் எல்லாம் தங்கள் தங்கள் தனி ஆதிக்கத்திற்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் ஏற்ற முறைகளை வகுக்கின்றார்களே யொழிய தேசத்திற்கும் தேசத்திலுள்ள பெரும்பான்மை மக்களுக்கும் ஏற்ற முறைகளை வகுப்பதே இல்லை. அந்தப்படி வகுத்தால் அரசியலில் பிழைப்பவர்களுக்கு பிழைப்பு போய்விடும்.ஏனென்றால் நமது நாட்டில் யோக்கியமானபிழைப்புகள் மறைந்து விட்டதினால் அநேகருக்கு அரசியலே வயிற்றுப் பிழைப்பாய் போய்விட்டது. அதிலும் தேசத்தைக்காட்டிக் கொடுத்தும் தேசமக்களின் சுயமரியாதையை விற்றும் பிழைக்கவேண்டிய நிலையில் அரசியல் பிழைப்பு அமைக்கப்பட்டு விட்டது. ஆதலால் இப்போதைய அரசியல் இயக்கங்களாலும் இப்போதைய அரசியல் பிழைப்புக்காரர்களாலும் ஏற்படும் அரசியல் சீர்திருத்தத்தால் இந்திய நாடு ஒரு நாளும் முன்னேற்றமடைய முடியவே முடியாது என்றுஉறுதியாய்ச்சொல்லுவோம். போதிய பலனளித்தாலும் பலனளிக்கா விட்டாலும் சமூக சீர்திருத்தமே இப்போது வேண்டற்பாலது. சமூகசீர்திருத்தம் இல்லாத காரணமே இந்திய மக்கள் பல மதங்களாக பிரியவும் அவற்றுள் உயர்வு தாழ்வு உள் சண்டைகள் ஏற்படவும் பல ஜாதிப்பிரிவுகள் உண்டாகவும் அவற்றுள் உயர்வு தாழ்வுச் சண்டைகள் ஏற்படவும் இதன் பலனால் மக்கள் நிரந்தரமாய் ஒற்றுமைப்பட மார்க்கமில்லாமல் வேற்றுமைப்பட்டு பிரிந்து நிகழ்வுமான நிலை ஏற்பட்டு இருக்கின்றது. இதை யாரும் மறைக்க முடியாது. இவற்றை உணர்ந்தே அநேக பெரியோர்கள் சமூக சீர்திருத்தத்திலேயே உழைத்து வந்திருக்கிறார்கள். தற்காலம் நமது சமூக நிலையின் பலன் தான் அரசியல் கொடுமைகளேயல்லாமல்வேறல்ல. அரசியல்சீர்திருத்தம் வந்த பிறகு சமூகசீர்திருத்தம் ஏற்பட்டு விடும் என்று சொல்பவர்கள் எல்லாம் முதல் நெம்பர் அயோக்கியர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. ஏதாவது ஒன்று இரண்டு யோக்கியர்கள் என்பேர்களும் அதில் கலந்

இருக்கின்றார்கள் என்று யாராவது சொல்ல வருவார்களானால் அப்படி சொல்லியிருப்பவர்கள் அயோக்கியர்களாயில்லாவிட்டாலும் முட்டாள்களாகவாவது கண்டிப்பாய், இருந்துதான் ஆகவேண்டும் என்று உறுதி கூறுவோம்.

சுவாமி விவேகானந்தருடைய வாக்கைப் பாருங்கள். ஸ்ரீமான் காந்தியின் முந்திய வாக்குகளைப் பாருங்கள். அப்படிப்பார்ப்பீர்களானால் இந்திய நாட்டின் நன்மையை பற்றி இவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பது உங்களுக்கு நன்றாய் விளங்கும்.

எனவே இது சமயம் நமது நாட்டிற்கு வந்துள்ள சாயமன் கமிஷனை சமூக சீர்திருத்தத்திற்காகவே நாம் உபயோகித்துக் கொள்ளவேண்டும். பகிஷ்காரமானாலும் வரவேற்பானாலும் சமூக சீர்திருத்தத்திற்கும் சுயமரியாதைக்குமே நடக்கவேண்டும். எம்மை சர் ஜான் சைமன் கூப்பிட்டு உமக்கு அரசப்பிரதிநிதி பட்டம் வேண்டுமா? சூத்திரன் என்கின்ற பட்டம் நீங்கவேண்டுமா? என்று கேட்டால் சூத்திரன் என்கின்ற பட்டம் நீங்கவேண்டும் என்றுதான் சொல்லுவோம். ஏனென்றால் நமக்கு கவர்னர் பதவியும் சட்ட மெம்பர் பதவியும் மந்திரி பதவியும் கிடைத்தும் இந்தப்பதவி பெற்றவர்களாவது ஜனப்பிரதிநிதிகள் சபைகளிலாவது நம்மை சூத்திரன் என்று அழைக்கும் தன்மை மாறவில்லை என்பதை உத்தேசித்துத்தான். பறையர் என்று இழிவாக பேசப்படும் குலத்தில் உதித்தவர் என்று சொல்லப்படும் ஸ்ரீமான் எம். சி. ராஜாவுக்கு இந்திய சட்ட சபையில் உட்காரும் யோக்கியதை கிடைத்தும் தெருவில் நடக்கும் உரிமையும் சுவாமியைப்பார்த்து கும்பிடும் உரிமையும் கிடைக்கவில்லை குளத்தில் தண்ணீர் குடிக்கும் உரிமையும் கிடைக்கவில்லை.

இனி எந்த அரசியல் பதவியும் பட்டமும் அதிகாரமும் கிடைத்தால் நாம் சூத்திரனாகாமல் மனிதனாயிருக்கக் கூடும் ஸ்ரீ எம். சி. ராஜா குளத்தில் தண்ணீர் குடிக்கக்கூடும் என்பதை யோசித்துப் பாருங்கள். 'சுயராஜ்யம் கிடைத்தால் எல்லாம் சரியாய் போய் விடும்' என்கின்ற பித்தலாட்டக்காரர்களை நம்புபவர்களுக்கு ஒரு வார்த்தை அதென்னவென்றால் இந்தியா சுயராஜ்யமடைந்திருந்த காலத்தில் தான் ராமராஜியத்தில்தான் மனுதர்மசாஸ்திரம் உண்டானது அதன் ஆட்சியிலும் இருந்தது. நமக்குசூத்திரப் பட்டமும் சண்டாளப்பட்டமும் கிடைத்தது தெருவில் நடக்க உரிமை கேட்டவர்களை கழுவில் ஏற்றினது வேதத்தையும் நீதியையும் படித்தால் நாக்கை அறுக்கவும் கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவும் பார்த்தால் கண்ணைகுத்தவுமான சட்டம் அமுலிலிருந்து வந்தது. இப்போது இந்திய அரசர்கள் ஆளும் ராஜயங்கள் அதாவது மைசூர் திருவாங்கூர் கொச்சி முதலிய தேசங்களிகளில் தான் மனுதர்மம தாண்டவமாடுகின்றது- ஆதலால் நமக்கு வேண்டியது: சமூக முன்னேற்றம், சுயமரியாதை இதை அடைய சாயமன் கமிஷனை மாத்திரமல்லமற்றும்ராககத்தில் இருப்பது என்பதையும் உபயோகித்துக்கொள்ளவேண்டியது மக்கள் கடமை எனவே சுயநலக்காரர்கள் வார்த்தையையும் புரட்டர்கள் வார்த்தையையும் நம்பி ஏமாந்து விடக்கூடாது என்று எச்சரிக்கை செய்கின்றோம்.

---

9-ம் பக்கத் தொடர்ச்சி.

பார்ப்பனர்களுக்கு இந்திய சட்டசபை தான் பிரதிநிதித்துவமுடையதாகிவிட்டது. அங்குதான் தமிழ் நாட்டைப்பற்றி அறியாத ஆசாமிகள் கூட்டம் கூடும். அங்கு என்ன வேண்டுமானாலும் பொய்யும் புளுகும் வண்டி வண்டியாய் அளக்கலாம் என்கின்ற தைரியம் இருக்கிறது. இந்திய சட்டசபையில் உள்ளவர்களுக்கு தமிழ் நாட்டைப்பற்றி தெரியாது என்பதற்கும் தெரிந்திருந்தாலும் அவர்கள் பார்ப்பனர்கள் சொ சொல்வதையே 'ஆமா சாமி' போடுகிறவர்கள் என்பதற்கும் ஒரு சிறு உதாரணம் காட்டுகின்றோம்.

சென்ற காங்கிரசின் போது, சென்னைக்கு வந்திருந்த பல வெளிமாகாண பிரமுகர்கள் என்பவர்களில் ஸ்ரீமான் கோஸ்வாமி என்பவரும் ஒருவராவார். அவருக்கு தமிழ் நாட்டு நிலைமையைப் பற்றி எடுத்துச் சொல்லலாம் என்பதாக ஒரு சிறு விருந்து வைத்து அதில் எல்லா சங்கதியும் எடுத்துச் சொல்லப்பட்டது. அந்த சமயம் ஸ்ரீமான் கோஸ்வாமி தமிழ் நாட்டில் தொடக்கூடாத ஜாதி பார்க்கக்கூடாத ஜாதி, தெருவில் நடக்கக்கூடாத ஜாதி இருப்பதாகத் தனக்குத் தெரியாது என்றும் தனது நாடாகிய வங்காளத்தில் ஜாதி வித்தியாசம் இருந்தாலும் இம்மாதிரி தொடக்கூடாத ஜாதி முதலியவைகள் இல்லையென்றும் சொன்னார் அதற்காகவே இங்கு சுயமரியாதை சங்கம் முதலியவைகள் ஏற்படுத்தி இருப்பதாகவும் அது மும்முரமாக வேலை நடக்கின்றதென்றும் இன்னின்னார் அதில் முக்கியமாய் உழைக்கின்றார்கள் என்றும் எடுத்துச்சொல்லப்பட்டது: அந்த சமயம் நன்றாய் குறிப்பாய் கேட்டுக்கொண்டிருந்தார்.

இப்படியிருக்க சமீபத்தில் கமிஷன் விஷயமாய் இந்திய சட்ட சபையில் பேச நேர்ந்த இதே ஸ்ரீமான் கோஸ்வாமி சென்னையில் புதுப் புதுச் சங்கங்கள் தோன்றி இருக்கின்றன. சுயமரியாதை சங்கம் கூட தோன்றியிருக்கின்றது என்று பரிகாசமாய் பேசி இருக்கிறார் எனவே அங்குள்ள ஆட்களுக்கு தமிழ் நாட்டைப்பற்றி எவ்வளவு கவலை இருக்கும் என்பதும் அவர்கள் எப்படி நடந்து கொள்ளக்கூடும் என்பதையும் இதன் மூலமாகவே தெரிந்து கொள்ளலாம்.

தமிழ் நாட்டுக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் பாடு படும் பெரியோர்களும் தொண்டர்களும் இவற்றை உத்தேசித்தே இந்திய பொது ஸ்தாபனங்களால் ஒரு நன்மையும் விளையாதெனக் கருதியே தனி ஸ்தாபனங்கள் மூலமாகவே வேலைசெய்து வந்திருக்கிறார்கள். இதனாலேயே தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள் இம்மாதிரி ஸ்தாபனங்களை அழிக்க பல பல சமயங்களில் ஸ்ரீமான்கள் வரதராஜுலு கந்தசாமி செட்டியார் குப்புசாமி முதலியார் போன்றவர்களை கையில் போட்டுக்கொண்டு முயற்சி செய்தும் வருகிறார்கள். இம்மாதிரி நிலையில் தமிழ் மக்கள் இனியும் உறங்கிக்கொண்டிருப்பது பெருத்த ஆபத்துக்கிடமானதாகும். அடுத்த தேர்தலிலாவது இந்திய சட்ட சபை தேர்தலுக்குப் பார்ப்பனர்களை விடாமலும் பார்ப்பன அடிமைகளை விடாமலும் விரட்டி அடிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். தமிழ் மக்கள் சுயமரியாதை அடையவேண்டியவிஷயத்தில் பார்ப்பனதாசர்களாயிருந்து, தேசத்திற்கும், சமூகத்திற்கும் துரோகம் செய்வதை விட சர்க்கார் தாசர்களாகவாவது இருந்து ஸ்ரீமான் எம். சி. ராஜாவைப் போல் நமது சமூக இழிவை நீக்க முயற்சிப்பது ஆண்மைத்தனமும் யோக்கியப் பொறுப்புமுடையதாகும்.

ஆதலால் இனிவரும் இந்திய சட்டசபை தேர்தல்களில் பார்ப்பன ஆதிக்கத்திற்கு இடம் கொடுத்து விடக்கூடாது என்று எச்சரிக்கை செய்கின்றோம்.

## ஸ்ரீமான் நாயக்கரின் சுற்றுப்பிரயாணம்.

ஸ்ரீமான் நாயக்கரவர்கள் சென்ற வாரம் திருத்துறைப்பூண்டி, நாகூர், திருவாரூர், மாயவரம், கும்பகோணம் முதலிய இடங்களுக்குச்சுற்றுப்பிரயாணம் சென்றுவிட்டு 24ந் தேதி காலை இவ்விடம் வந்து சேர்ந்தார். மறுபடியும் 25ந் தேதி இரவு புறப்பட்டு தஞ்சை வாலிபர் மகாநாட்டுக்குப் போகிறார் அங்கிருந்து சென்னை முதலிய இடங்களுக்குப் போய் விட்டு 28 அல்லது 29ந் தேதி ஈரோடு திரும்புவார்.

---

ஏஜண்டுகள் தேவை.
தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
கேட்லாக் இனாம்,
ஸ்ரீ கிருஷ்ணாநந்த
கௌதம பரிமளசாலை.

ஆண்மை தரும் அமிர்த ரச தாதுபுஷ்டி லேகியம், அங்க நோயகற்றும் அருமாஞ்சனம், வாய் நாற்றமகற்றும் வாசனைப் புகையிலை, நற்சுகமளிக்கும் நறுமண சந்தனாதித் தைலம், நலம்மிகுந்த நறுமண அரைக்கீரை விதைத் தைலம், நாளுக்கு நாள் குணமளிக்கும் நறுமண கூந்தல் தைலம், பாங்குடனமைந்த வாசனைப் பாக்குத்தூள், கண்டோர் வியக்கும் கல்நார் பற்பொடி. சாதுக்கள் இன்புறும் ஊதுபத்தி தினுசுகள், பூஜைக்குகந்த வாசனை தசாங்கம். தேஜஸ் கொடுக்கும் ஸ்நானப் பவுடர். யந்தகாசம் பொருந்திய நறுமண சந்தன பில்லை. சித்தரை மகிழ்விக்கும் பல அத்தர் தினுசுகள்.

அடியிற்கண்ட விலாசத்தில் கிடைக்கும்.
ஸ்ரீ கிருஷ்ணாநந்த கௌதம பரிமள சாலை,
வலங்கைமான் போஸ்டு, தஞ்சை ஜில்லா.

---

பார்ப்பனீயம் ஒழிய
குடி அரசை வாசியுங்கள்

## தமிழில் புரோகிதம் வேண்டும்

சென்னையில் சிலமாதங்கட்கு முன்னால் இது விஷயமாக திருவாளர்கள் சிங்காரவேற் செட்டியார் அவர்கள் அட்வகேட்பிகா சுப்பிரமணியபிள்ளையவர்கள் சுவாமி வேதாசலமவர்கள் திரு, கஜேந்திர முதலியாரவர்கள் ஈ வெ ராமசாமி நாயக்கரவர்கள் எல்லோரும் கூடிப் பேசினார்களே யொழிய இது சம்பந்தமாக முயற்சி எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. மதுரையில் இரண்டு நாள்களுக்கு முன்னர் பார்ப்பனரல்லாத புரோகிதர் ஒருவரை ஒரு கல்யாணத்திற்கு திட்டம் செய்து வைத்திருந்தும் அவர் அந்த சமயம் வாராததால் பெண் வீட்டார் வேறொரு பார்ப்பன புரோகிதரைக் கொண்டுநடத்தியதாக தகவல் கிடைத்திருக்கிறது சுயமரியாதையுள்ள தமிழர்கள் அதாவது பார்ப்பனரல்லாத புரோகிதர்கள்கூட வட மொழியில் மந்திரத்தைச் சொல்லுகிறாரே! தமிழில் மந்திரமில்லையா? இல்லாவிட்டால் தயாரிக்கக்கூடாதா வென்று அநேகர் கேட்பதுடன் தாமதமாகவே புரோகிதம் செய்து கொள்ள பிரியப்படுகின்றனர்.

பார்ப்பனரலலாத புரோகிதரும் வடமொழி மந்திரத்தை சொல்வதாலும் அவர்களும் சமயத்தில் கிராக்கி செய்து விடுவதாலும் அல்லது கிடைப்பதில்லை யாதலாலும் அநேக நன்மைதீமையான காரியங்கள் தடைப்பட்டு பின் பார்ப்பன மக்களாலேயே நடத்தகூடிய நிலைமைக்கு வந்து விடுகின்றது ஆகவே நமது இயக்கம் பலப்பட்டு புரோகிதத்தின் மூலம் பார்ப்பனர்களுக்கு போகும் பணத்தைத் தடுத்து பார்ப்பனர்களை பகிஷ்கரிககவேண்டுமானால் புரோகிதத்தில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு அவசியம் தமிழில் புரோகிதம் வேண்டுவது இன்றியாமையாதது என்பதே அடியேனது அபிப்பிராயம் ஆனதால் இனியாவது சென்னைத் தலைவர்கள் கூடிய விரைவில் ஒன்று கூடி தமிழில் புரோகிதம் ஒவ்வொருவரும் தாமாகவே செய்துகொள்ளும் நிலைமையில் புத்தக ரூபமாக வெளியிடும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்,

அ, சொ. அருணாசலன்

மதுரை.

## காரைக்குடி ஜில்லா
## பார்ப்பனரல்லாதார் வாலிபர் சங்கம்

பிரபவ-ளு மாசி-மீ 4-ம நாள் காலை 10 மணிக்கு இவ்வூர் திருவாளர் பள. வெ. ராம. அவர்கள் பங்களாவில் சங்க உபதலைவர் திருவாளர் ஆவி. லெ. அருணாசலன் செட்டியாரவர்கள் தலைமையில் சங்கத்தின் மகாசபை கூட்டமொன்று நடைபெற்றது.

ன்பார்ப்பனரல்லாதார் முன்னேற்றம் குறித்து சுயமரியாதை இயக்கத்துக்கு வேண்டுவன செய்வதென்றும்.

இச்சங்கத்திற்கு அங்கத்தினர் சந்தா ஆண்டு ஒன்றுக்கு அணா எட்டு வீதம் வாங்குவதென்றும். வொருவருடமும் தை மீ 2-ம் நாள் முதல்கொண்டு கணக்கு வைத்துக் கொள்ளுவதெனவும். தீர்மானிக்கப்பெற்றது.

இவ்வருடத்திற்கு திருவாளர்களான. சா. தே. சிவராமன் செட்டியார் அவர்கள், அழ. ராம. அழகப்ப செட்டியார் அவர்கள், மு. பழனியப்ப செட்டியார் அவர்கள் சா. கணேசன் செட்டியார் அவர்கள், த, ராமகிருஷ்ண ஆசாரியவர்கள் ஆகியோர் நிர்வாக சபை அங்கத்தினர்களாக தெரிந்தெடுக்கப் பட்டார்கள்.

வெ இராமநாதன் காரியதரிசி

## ஈரோடு தென்னிந்திய நல உரிமைச் சங்கக்கிளை.

சென்ற ஞாயிற்றுக்கிழமை 19—2—28 ல மாலை 6-மணிக்கு போலீஸ் ஸ்டேஷனுக் கெதிரிலுள்ள ஸ்ரீமான்கள் எஸ். ராமசாமி நாயக்கர் குமாரசாமிக் கவுண்டர் அவர்கள் மண்டியின் மெத்தையின் மேல் ஷெ சங்கம் ஒன்று ஸ்தாபிக்க ஈரோடு மகா ஜனங்களின் மாபெருங்கூட்ட மொன்று கூடியது.

ரியர்ட் தாசில்தார் ஸ்ரீமான் E. N. வெங்கட்ட பெருமாள் நாயுடுகாரு B A. அவர்கள் தலைமை வகித்தார்: ஸ்ரீமான்கள் வக்கீல் E. V. நஞ்சப்ப செட்டியாரவர்களும் S. மீனாக்ஷிசுந்திர முதலியார் B. A. L. T. அவர்களும் "குடி அரசு" ஆசிரியர் E. V. ராமசாமி நாயக்கரவர்களும் சங்கத்தின் அவசியத்தைப் பற்றியும் நோக்கத்தைப் பற்றியும் ஜனங்கள் பரவசப்படும்படி சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்

கடைசியாக, சங்கத்தின் தலைவராக ஸ்ரீமான் E. N. வெங்கட்டபெருமாள் நாயுடு அவர்களும் உபதலைவராக ஜனாப் K.A. ஷேக் தாவுத் பகதூர் அவர்களும் காரியதரிசியாக ஸ்ரீமான் S. மீனாக்ஷிசுந்தர முதலியார் அவர்களும், கூட்டு காரியதரிசியாகிய கௌரவ மாஜிஸ்ட்ரேட் எம். சிக்கய்ய நாயக்கரும் பொக்கிஷதாரராக, பாங்கர் எம். ஷண்முகசுந்தர முதலியாரவர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

தவிர ஸ்ரீமான்கள் மண்டி எஸ். ராமசாமி நாயக்கர், வக்கீல் நஞ்சப்ப செட்டியார், மண்டி முத்துக்கருப்பன செட்டியார், வக்கீல் எஸ். ராஜா, ஜின்னிங்பாக்டரி சி. ரங்கராஜுலு செட்டியார், "குடி அரசு" ஆசிரியர் ஈ. வி. ராமசாமி நாயக்கர், டாக்டர் டேவிட், மணியம் ஜி. வேணுகோபால் நாயுடு, மணியம் அப்பய்ய கவுண்டர், மிராஸ்தார் கே. பி. ஷண்முகம் பிள்ளை, மிராஸ்தார் பி. முத்துசாமி கவுண்டர், மிராஸ்தார் அப்துல்குதூஸ்சாயபு, முதலியவர்கள் நிர்வாக அங்கத்தினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்ட பின் வந்தனோபசாரத்துடன் இரவு எட்டேமுக்கால் மணிக்கு சபை இனிதுமுடிவுற்றது.

## திரு. கனகசபை நாடார் அவர்களுக்கு
## வரவேற்பு.

திருவாளர் வி. கனகசபை நாடார் அவர்கள் தஞ்சை ஜில்லா போர்டு மெம்பராக நியமிக்கப்பட்டிருப்பதைக் கொண்டாடுவதற்காக பொறையாறு நாடார் ஹைஸ்கூலில் 21-2-28ல ஒரு கூட்டம் கூடி திரு. நாடார் அவர்களுக்கு ஒரு உபசார பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

## திருப்பத்தூர் தாலூக்காபோர்டு எலக்ஷன்.

குடியாத்தம் தாலூக்காவிற்கு யேற்பட்டுள்ள ஆறு ஸ்தானங்களில் கீழ்விலாச்சூர் சர்க்கிளுக்கு குடியாத்தம் முனிசிபல் சேர்மன் ஸ்ரீ எம். வி. பீமராஜ முதலியார் சென்ற வருஷம் போலவே போட்டியின்றி தெரிந்தெடுக்கப்பட்டார்.

## டெண்டர் விளம்பரம்.

1928-29 வருடத்துக்கு டிஸ்ட்ரிக்ட்டு ரோட்டுகளின் பரிபாலிப்பதின் விஷயமாய் முத்திரையிட்ட டெண்டர்கள் தேவை. அவைகள் 1928-ளு மார்ச்சு-மீ 1-தேதி பகல் 12-மணிக்குள் டி. போர்டு இன்ஜினீருக்கு வந்து சேரவேண்டியது,

2. ரோட்டுகளைப்பற்றிய விவரங்களும் ஒப்பந்த (கண்ட்ருக்ட்டு) நிபந்தனைகளும் டெண்டர் பாரங்களும் கோயமுத்தூர் ஜில்லா போர்டு இன்ஜினீர் ஆபீஸிலும் சம்பந்தப்பட்ட சப்டிவிஷன் செக்ஷன் ஆபீஸ்களிலும் கிடைக்கும்.

ஆர். எஸ். மல்லாய்,

ஜில்லா போர்டு இன்ஜீனீர், கோயமுத்தூர்.

## விளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் என் குமாரர்கள் மூவர்களான சிரஞ்சீவி கோவிந்த ரெட்டி, ராஜரத்தின ரெட்டி, முனிசாமி ரெட்டி இவர்களில் மூத்தவனான கோவிந்த ரெட்டி என்பவன் தகாதவர்களிடம் சவகாசம் செய்து தாசிகள் சம்மந்தம் அடைந்து பொருளை துர் விநியோகம் செய்துவருகிறான். அவனுக்கு யாராகிலும் பாண்டு, பத்திரம் இவைகள் ஆதாவின் பேரில் பணம் உதவினால் எங்கள் குடும்ப சொத்தை எந்த விதத்திலும் பாதிக்காது. தற்காலம் தன்னிட சுய புத்தியில்லாமல் பராதீனனாய் இருப்பதால் அவனிடமிருந்து கிரயம், அடமானம், போக்கியம் முதலானதுகள் யாராவது பெற்றால் நியாய விரோதமென்றும் ஆதலால் அது செல்லத்தக்கதல்ல வென்றும் இதனால் தெரிவிக்கப் படுகிறது. முத்தியாலு ரெட்டியார்,

அகரம், கலவை போஸ்டு,

வாலாஜா தாலூக்கா, N. A Dist.

சுதேச காப்பி பௌடர் என்னும்

## ஆவாரம்பூ சூரணம்.

இதில் தேக போஷணைக்குரிய சத்து வேண்டிய அளவு இருக்கிறது. கஷாயமிட்டு பால் சர்க்கரை சேர்த்து உபயோகிக்க தேக உஷ்ணத்தை அகற்றி குளிர்ச்சியையும் வலிவையும் கொடுக்கும். ஒருமண்டலம் உபயோகிக்க ரூ. 0—9—0. அரை மண்டலம் உபயோகிக்க ரூ. 0—5—0.

கு. முத்துக்குமார பிள்ளை,

c/o மீனாம்பிகா போஜன சாலை,

கச்சேரி வீதி, ஈரோடு.

## காங்கிரசால்
## ஆதிதிராவிடருக்கு மரணம்.

3—2—28-ம் தேதி ஸைமன் கமிஷன் பம்பாயில் வருவதை முன்னிட்டு சென்னையில் நடந்த கலகத்தன்று ஆதிதிராவிட மரபில் உதித்த 32-வயதுள்ள தட்டாரவேலை சொ. பார்த்தசாரதி என்பவர் சென்னை ஜுஜிலிசைனு பஜார் ரோட் பூக்கடைக்கருகில் சாப்பு வியாபாரம் செய்யும் மணவாள செட்டியார் கம்பெனியில் தட்டார வேலைக்கு தினம் போவதுபோல் வேலைக்குப் போகையில் கடைமூடி இருந்தபடியால் தனது சிறிய தகப்பனார் அமிஞ்சிகரையில் இருக்கிறபடியால் அங்குபோகலாமென்று போர்ட் ஸ்டேஷனில் ரயில் ஏறி சேத்துப்பட்டு ஸ்டேஷனில் இறங்கி அமிஞ்சிகரை போகிறேனென்று சிநேகிதர்களிடம் சொல்லிவிட்டு லாகாலேஜ் அண்டை போகும்போது அங்கு ஜனங்கள் கூடியிருந்தபடியால் அங்கு நின்று வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்தார். காங்கிரஸ் காரர், கவர்மெண்ட் போலீஸ் கமிஷனர் இன்ஸ்பெக்டர் எவ்வளவு சொல்லியும் கேளாமல் கல்லுகளாலும் புட்டிகளாலும் அடித்து மட்டி கமிஷனர் ராயபுரம் அய்யங்காரை அதிகாய படுத்தியதால் போலீசார் சுட்டதில் மேற்கண்ட வேடிக்கையை பார்த்திருந்த திரு. சொ. பார்த்தசாரதிக்கு நெஞ்சோரம் 7 இடத்தில் ரவைகுண்டு பாய்ந்து உடனே மரணமடைந்தார். போலீசாரே மோட்டாரில் பிரேதத்தை ஏற்றிக்கொண்டு இராயபுரம் ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் சேர்த்தார்கள். மறுநாள் 4-ந் தேதி இறந்தவரின்பிரேதத்தை ஆப்ரேஷன் செய்து சோதித்து சீப்மாஜிஸ்டிரேட், மாஜிஸ்டிரேட் டவுன்போலீஸ் இன்ஸ்பெக்டர் யாவரும் இறந்தவரின் வாரிஸ்தாரிடம் வாக்குமூலம் வாங்கிக்கொண்டு பிரேதத்தை மாலை 4-மணிக்கு கொடுத்தார்கள். அந்தப்பிரேதத்தை இறந்தவரின் சொந்தமாமனாகிய திரு குப்புசாமிபிள்ளை வீட்டில் 1-மணி நேரம்வைத்து சுற்றத்தார் துக்கங்கொண்டாடி, அதற்குமேல் ஆயிரம் ஆதிதிராவிடர்களோடு 'காங்கிரசால் நேரிட்ட மரணம்' என்று பெரிய போர்டு எழுதிபிரேதத்திற்கு முன்பாக பிடித்துக் கொண்டு, யூனியன் ஜாக்கொடி பிடித்துக்கொண்டு பிரேதத்தை அடக்கம் செய்து வீட்டிற்குவரும்போது காங்கிரஸ்காரரால் ஏற்பட்ட மரணமென்று போர்ட் எழுதிபிடித்துக் கொண்டு போன விஷயத்திற்கு பொறுமை கொண்டு தங்கசாலை மிட்டாய்க்கடையண்டை காங்கிரசை சேர்ந்த சில தடியர்கள் கலகஞ்செய்து ஆதிதிராவிடர்களை தொந்திரவு செய்து அடித்துத் துரத்தினார்கள்.

ஆ. ஷண்முக பத்தன். T. K. சாமிப்பிள்ளை.


### இரகசியம் வெளியாய் விட்டது

| | | | |
|---|---|---|---|
| இலவாழ்க்கையின் இரகசியம் | ரூ. ... | 2 | 0 |
| ஸ்திரீ புருஷ இரகசியம் | ,, ... | 1 | 0 |
| ரதி மதன சிங்கார இரசியம் | ,, ... | 0 | 12 |
| மணவாழ்க்கையின் மர்மம் | ,, ... | 2 | 4 |
| தம்பதிகளின் மர்மம் | ,, ... | 1 | 0 |
| ஸ்திரீ மர்ம சாஸ்திரம் | ,, ... | 1 | 0 |
| கொக்கோகம் | ,, ... | 1 | 0 |
| மதன ரதி ரகசியம் | ,, ... | 1 | 0 |

எஸ். ஆர். பகவான் அண்டு கம்பெனி,
மிண்டு பில்டிங்ஸ், மதராஸ்.


## மருங்காபுரா லாக்கா
## ஒடுக்கப்பட்டவர் மகாநாடு.

ஷை மகாநாடு 21—2—28உ கோவில்பட்டியில் திரு. வ. ந. நல்லான் அவர்கள் தலைமையில் கூடி, ஆதிதிராவிடர்களுக்கு வாசகசாலை குடித் தண்ணீர் கிணறுகள் முதலியவை நிறுவ வேண்டுமென்றும், ஆதிதிராவிட உபாத்தியாயர்களுக்கு அதிக உதவி அளிக்க வேண்டுமென்றும், இந்த மகாசபையும், ஸைமன் கமிஷனும் ஆதிதிராவிடர்களின் நிலையைக் கவனித்து உதவி செய்ய வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றது.

நிருபர்.


சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!! புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

### முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்துவிட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள், தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.



பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!

ஹிப்னாடிஸ மெஸ்மெரிஸ மென்னும்

## மனோவசிய இரகசிய சாஸ்திரம்.

இப் புத்தகம் ஆங்கில நாட்டார் செய்து அனுபவ மடைந்தது; மனதை அடக்குவது, யோக சித்தி அடைவது, தம் இஷ்டம்போல் பிறரை நடத்துவது முதலான மனோவசிய இரகசியங்களும், அதை அப்பியசிக்க வேண்டிய முறைகளும் தெளிவாய் விவரிக்கப்பட்டிருப்பதுடன் சர அசர பேதமான உலகத்தையே தம் வயப்படுத்தல், அநேகமாயிர மைல்களுக்கப்பாலுள்ள நாடுகளில் நிகழும் விஷயங்களை யறியும் ஞானத்தைப்பெறல், ஒளஷதமின்றி வியாதிகளைப் போக்கல், திரிகால வர்த்தமானங்களைத் தெரிந்து ஆனந்திக்கும் நிலையை யடைதல், பிறரைத் தன் வயப்படுத்தல், ஹிப்னாடிஸம் மெஸ்மெரிஸம், திடசித்தப் பயிற்சி, ஜன வசியம், மனோவசியம், ஜீவப்பிராணிகளின் வசியம், தூரதிருஷ்டி, தூரசிரவணம், விஷஜெந்துக்களின் விஷத்தை நீக்குதல், பிறருடைய மனோ நிலையைக் கண்டுணர்தல், பிரேதங்களைக் கண்டு பேசல், அன்னியர்களுக்குத் தோன்றாது மறைதல், ஞானதிருஷ்டி, ஜீவமின்சார விளக்கம், தூக்கத்தில் நிகழ்த்தும் பல அரிய ஆச்சரியங்கள், ஹிப்னாடிஸ வைத்தியம், காந்தவைத்தியம், பிராணாயாம யோக அப்பியாசம், ஏகாந்தநிலை, விரலைக்காட்டி பிறரை தூங்கவைத்தல், எவ்வித விஷயத்திலும் ஜெயம் பெறுதல், தூரத்திலுள்ளோரை யருகில் வரவழைத்தல், ஆஞ்சநேயர் வசியமூலமந்திரம், உபாசனை இது போன்ற பல மனோவசிய முறைகளும் ஒவ்வொருவரும் பழகி இன்புறும் வண்ணம் மிகத் தெளிவாய் பல சித்திரப் படங்களுடன் வெளி வந்துள்ளது. ஹிப்னாடிஸம் மெஸ்மெரிஸம் (மனோவசிய இரகசிய சாஸ்திரம்) என்கிற வித்தையில் தேர்ச்சி பெற்ற ருஷியா—ராஸ்புட்டின் அடைந்த மனோவசிய சக்தியைக்கொண்டு அவர் என்ன அரிய பெரிய காரியங்களை சாதித்தார் என்பது எல்லோர்க்கும் தெரியவேண்டி அவருடைய சரித்திரத்தை சுருக்கமாகவும் இதில் எழுதப்பட்டுள்ளது.

அழகான பைண்டு, சுத்தமான பதிப்பு, 208 பக்கங்கொண்ட நேர்த்தியான புஸ்தகம். விலை ரூ. 1—8—0

வி. ஜெ. வேலு அண்டு கம்பேனி, ஜூலை போஸ்டு, மதராஸ்.

6-ம் பக்கத் தொடர்ச்சி.

மென அறிந்த வசிட்டமனி மன்னனுக்குத் தேறுதல் சொல்லி இராமனை அனுப்புமாறு ஏவினன். அதுகேட்ட மன்னனும் இராமனை முனிவனுடன் அனுப்ப இசைந்தனன்.

விசுவாமித்திர முனிவன் முன்னாலே செல்ல பின்னால் இராமனும் இலக்குவனும் அவனைத்தொடர்ந்து காடு நோக்கிச் சென்றனர். அவர்கள் சரயு நதிக்கரையை யடைந்தபோது முனிவன் அவர்களுக்கு பலை அதிபலை எனும் வித்தைகளைக்கற்றுக்கொடுக்கின்றனன். அன்றிரவு அக்குழந்தைகள் சிறுகுகளாலாகிய படுக்கையில் துயின்றனர். அவர்களை விடிந்ததும் முனிவன விடிந்துவிட்டது எழுந்திருங்கள் என்று சத்தமிட்டழைத்து எழுப்பினன.

## 1. கிளி கற்ற தமிழ்.

(சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை.)

## 2. அறிவு பெற்ற தமிழ்.

(மெய்ப்பொருள் காண்பது அறிவு)

1 வழு மிகுதியும் உள்ள நூல்களைக் கேட்ட காலத்து, சீத்தலைச் சாத்தனார் வெகு வருத்த முற்று எழுத்தாணி கொண்டு தலையிற் குத்திக் கொள்வார். தலையில் சீழ் வடியும். இதனால் இவருக்கு இப்பெயர் வாய்த்தது.

ஆனால் அவரே குறளைக்கேட்டு, தலைக்குத்துத் தீர்ந்து அதனை இயற்றியருளிய பொய்யா மொழிப்புலவரைப் பெரிதும் போற்றிப் பாடினர்.

2 சீத்தலைச் சாத்தனார் கதையிது, அதிற்கூறிய பொருள் பிடித்தமுடையதன்று.

சீத்தலை என்பது ஓர் ஊரின் பெயர். பண்டைப்புலவர் பலர் தமது பிறப்பிடத்தின் பெயரைச்சூட்டிக்கொண்டனர். மாங்குடி மருதனார், ஆவூர் மூலங்கிழார் ஆகிய பெயர்கள் சான்றாம்.

சீழ், தலை என்பது சீத்தலை என்றாகிவாராது.

சீத்தலைச் சாத்தனார் தலைக்குத்துத் தீர்ந்தது என்பதற்கு, பயனில மொழி கேட்டதனால்உண்டாய மண்டைக்குத்துத் தீர்ந்தது எனபதே பொருள்.

அறிவு ஒளியினின்றும்எழும் மின் ஆற்றல்(எலெக்ட்ரிக் பவர்) தலைநோயைத் தீர்க்கும். நல்ல அறிவு நிரம்பிய உரையே மருந்து. திருக்குறள் அவ்வாறு சீத்தலைச் சாத்தனார்க்குத் தணிவு செய்தது. இதுவே அறிவுக்கும் பொருத்தமாகத் தோன்றுகிறது.

சே. சே. சேகரன்திரட்டு.


ஞான உதயம்.

ஆயத்தம், சொற்பம்,, முந்துங்கள்,,,

(இது ஓர் அநுதின தியானம்)

பக்தர் அங்கீகரித்தது.

பாலர்முதல் விருத்தர்வரை சகலரும் தியானித்து தெய்வ கிருபா கடாக்ஷத்தைப் பெறலாம். பக்திரச இனியவாக்கியங்களாலானது. பெருந்துக்கங்களை மாற்றியது. இதன்பலன் ஒன்றாய் அனுப்புவோம். வெள்ளை திக்கார்டில் சுத்தமாய் சித்திர வர்ண அழகாய் 9 X 6. அங். அளவுள்ளது, 1, கார்டு விலை, 0—4—0, செலவு 0—3—0. 5, க்கு 1 கமிஷன். முன்பணமும் தபால் லேபில்களும் அனுப்பலாம். விலாசம்

கா. மதுரம் சந்தோஷம் (உபா)

கட்டளை, பாலாமடை போஸ்டு

திருநெல்வேலி ஜில்லா.



இனும்! இனும்!! இனும்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப்பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும்.

ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

# சிந்தாமணி லேஹியம்.

(அயகாந்த செந்தூரம்)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனானி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சக்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அசன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை வராளமாகச் சேர்த்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உறவாக்கி, நை பாகம், செய்பாகம் தவறாமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிறோம். இதற்கு பத்தியம் இல்லை.

## இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனால் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து துவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, ஒடுவாதம், அஜீர்ணம் முதலியவைகளையும் காற்றாய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் கீர்த்தனை பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன்தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிறோம். எமது விலாசம்: ஸ்ரீ நளம் அண்டு கம்பெனி,

பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதறாஸ்.



## சிங்காரக் குழந்தை அல்லது சித்திரக் கள்ளன்.

இதில் சிங்காரக் குழந்தையின் சாமார்த்தியமும் சமயத்திற்கேற்ற நடிப்பும், வீரச் செய்கைகளும், தாசி வலையில் சிக்கிய தன் தகப்பனரை மீட்பதும், தகப்பனும் பிள்ளையும் தங்கள் சாமர்த்தியத்தைப் பரீக்ஷிப்பதும், தகப்பனார் ஆபத்தில் சிக்கி இறப்பதும், இவனை பிடிக்க முயல்வதும், அரசனை ஏமாற்றிப் பகிரங்கமாய் தன் தகப்பனுடைய சமக் கடன்களை முடிப்பதும், கடைசியில் அரசன் மகளையே மணம்புரிந்து அரசு புரிவதும் படிக்கப்படிக்க ஆச்சரியத்தை உண்டாக்கும். நான்கணாவுக்கு எத்தேசத்து ஸ்டாம்பாலும் அனுப்பி பெறலாம்.

ஞானதிருஷ்டி அல்லது திரிகால தீபம் அணா 12. எக்கேள்விக்கும் எளிதில் பதிலளிக்கும் ஆச்சரியமான ஆருட நூல். கலியின் கோலம் ஓர் பெண்மணியால் எழுதிய (துப்பறியும் நாவல்) அணா 12.

ஜானகிராம் அண்டு கம்பெனி: வெங்கட்டராமய்யர் வீதி, மதராஸ்



## இனும்! 1928வருஷ காலண்டர்!! இனும்!!!

கட்டிவெள்ளி நகைகள் சுத்தமானவேலை.

எங்கள் கம்பெனியில் உங்களுக்கு வேண்டிய முரசுகுத்தி ஒத்தை இரட்டை செங்காரக்கொடி, முத்துசெயின், புதுச்சேரி புளுதண்டை, சாதாசெயின், கைகோர்வை, அரைஞக்கொடிகளும், இமிடேஷன் பட்டைசிகப்பு கம்மல் கடுக்கன், தோடு, மோதிரம், மூக்குத்தி, வகையறுக்களும், இன்னும் இதில் கண்டிராத வெள்ளி, பவுன், நகைகளும ஜவுளிவகைகளும் இருக்கிறது. வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால் விலைவிபரம் தெரிவிக்கப்படும்.

விலாசம்

வி. ஜெ. தணிகாஜலம் அண்டு கம்பெனி.

சராப் அண்டு ஜவுளி வியாபாரம், குகை, சேலம் (S India)

## ராமதாஸ் கல்யாணம்.

ஸ்ரீமான் காந்தி தமது மகன் கல்யாணத்தில் மண மக்களை ஆசீர்வதித்துச் சொன்ன புத்தி மதி:—

நீ உன் குற்றங்களை யெல்லாம் என்னிடம் ஒப்புக்கொண்டிருக்கிறாய். ஆனால் அவை குறித்து நான் அஞ்சவில்லை. ஏனெனில் நீ ஒளியாது அவற்றை ஒப்புக்கொண்டதனால் என்னைப் பொருத்த வரை குற்றமற்றவனாகி விட்டாய். நீ யாரேனும் ஒருவரை ஏமாற்றுவதைவிட உலக முழுமையும் உன்னை ஏமாற்றுவதை விரும்புவாய் என்று தெரிந்து நான் அளவிலா மகிழ்ச்சி யடைகிறேன். இவ்வாறே உண்மை நெறியில் நின்று நீடுழி வாழ்வாயாக.

"உன் மனைவியின் கௌரவத்தை நீ காப்பாற்றவேண்டும். அவளுடைய உற்ற நண்பனாயிரு, நீங்கள் உழைப்பு, எளிமை, தன்னடக்கம் இவை பொருந்திய வாழ்வு நடத்தவேண்டும். உங்களில் எவரும் இன்னொருவரைக் காமப் பொருளாகக் கருதவேண்டாம்.

நீங்கள் இருவரும் இந்த ஆசிரம பயிற்சி பெற்றிருக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கை தாய் நாட்டின் தொண்டிற்கே அர்ப்பணம் செய்யப்படுவதாக. உங்கள் உடம்பு தேய்ந்து மாயும் வரை தாய் நாட்டுக்கு உழையுங்கள். நாம் வறுமை விரதம் பூண்டிருக்கிறோம். ஆதலின் நீங்கள் ஏழை ஜனங்களைப்போலவே உங்கள் உணவுக்காக நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து வாழுங்கள். தினசரி உழைப்பில் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள். அதிலே மகிழ்ச்சி பெறுங்கள்.

உங்களுக்கு நான் வெகுமதி எதுவும் அளிக்கவில்லை. ஒரு ஜோடி கைக்கதிர்கள், எனது பேரன்புக்குரிய பகவத்கீதை, பஜனாவளி. இவற்றைத் தவிர நான் உங்களுக்குத் தரக்கூடியது எதுவுமில்லை. நூல் மாலை உங்களைப்பாது காக்கும் கவசமாயிருக்குமாக. நண்பர்களிடமிருந்து விலையுயர்ந்த வெகுமதிகளை வாங்கி உங்களுக்கு அளித்திருந்தேனாயின் உலகம் என் அகங்காரத்தைக் குறித்து எள்ளி நகையாடும். அது நியாயமுமாகும். ஆனால் இன்று நான் என் இயல்புக்குத் தகுந்த வெகுமதிகளையே உங்களுக்கு அளித்துள்ளேன். என்பதற்கு உலகம் சாட்சிகூறும்.

நீண்டகாலம் தொண்டு செய்து நீங்கள் வாழுமாறு இறைவன் அருள் புரிவாராக."

நான்கு வருணங்களை நாலாயிரம் சாதிகளாயும், உட்சாதி கிளைகளாயும் ஆக்கிய தீய முறையைப் பற்றி அவர் விரித்துக் கூறி, ஆசிரமத்தில் ஒரேசாதியில் நடக்கும் கலியாணம் இதுவே கடைசியாயிருக்குமென நம்புவதாய்ச் சொன்னார். ஒரு சாதி மணங்களை ஆதரவு செய்து வெவ்வேறு உட்சாதிகளைச்சேர்ந்தவர்களுக்குள் கலியாணம் நடத்துவதே ஆசிரம விதியாயிருக்கவேண்டுமென்றும் சொன்னார். லோகோபகாரி.

## ஸ்ரீ குரு ஆசிரமம்.

### மணம்பூண்டி திருக்கோவலூர்

இவ்வாச்சிரமத்தின் திறப்பு விழா விபவ ஆண்டு வைகாசித் திங்கள் மூல நட்சத்திரத்தில் நடத்துவதென்று தீர்மானிக்கப் பெற்றிருக்கிறது. கட்டிட வேலை தொடங்கப்பெற்றாய் விட்டது. பங்குனி மாதம் 10 ந்தேதி சேலத்தில் தலைவர் திரு ம. நா. குமாரசாமி பிள்ளை அவர்கள் கோயமுத்தூர் ஜில்லாவில் நிதி திரட்டும் பொருட்டு சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். இது காறும் பின் கண்ட விபரப்படி அன்பர்கள் நன்கொடை நல்கியிருக்கிறார்கள்.

திருவாளர்கள்

| | |
|---|---|
| மணம்பூண்டி பக்த பால சமாஜம் | 600 |
| ,, ம. ர. குமாரசாமி பிள்ளை | 100 |
| ஈ. வெ. ராமசாமி நாயக்கர் | 100 |
| ம. கு. வெ. உலகநாத செட்டியார் | 50 |
| சேந்தமங்கலம் பார்க்கவர் சங்கம் | 33 |
| மேற்கூறிய ,, | 33 |
| செட்டியார் பேட்டை சந்தர உடையார் | 25 |
| பா கிருஷ்ணசாமி செட்டியார் | 25 |
| லால்குடி எல். என். பாமசிவம பிள்ளை | 25 |
| திருப்பூர் கே. எஸ் ராமசாமி கவுண்டர் | 25 |
| பூவாளூர் சைவசித்தாந்த சங்கம் | 25 |
| சேந்தமங்கலம் வைசிய சங்கத்தார் | 21 |
| மேற்கூ வே துரைசாமி உடையார் | 20 |
| சேந்தமங்கலம் மிட்டாதார் சீத்தாராம் செட்டியார் | 15 |
| ,, ஐராவத உடையார் | 15 |
| திருவாரூர் தி. நா. சபாபதி முதலியார் | 15 |
| புத்தூர் துரைசாமி பிள்ளை | 10 |
| திருச்சி பயிலம் சன்மார்க்க சபை | 10 |
| திருமருகல் கு. ராமசாமி பிள்ளை | 10 |
| மஞ்சகொல்லை ரா. ச. ராமசாமி முதலியார் | 10 |
| திருமருகல் சன்மார்க்க சங்கத்தார் | 8 |
| வாழூமங்கலம் ,, ,, | 8 |
| தி. அ. வெ. விசுவநாத பிள்ளை | 5 |
| பூவாளூர் வைத்திலிங்க ஐயா | 5 |
| திருச்சி ப. சங்கிலியா பிள்ளை | 3 |
| வடசேரி வைத்தியநாதய்யர் | 1 |
| செந்தமங்கலம் கோபாலய்யர் | 1 |
| செங்கற்பட்டு ஜில்லா ஒரு அன்பர் | 1 |
| புதுக்கோட்டை மிருதங்கம் தக்ஷணாமூர்த்தி | 1 |
| ,, மாக்கடை செல்லப்ப பிள்ளை | 1 |
| ஆகமொத்தம் ரூ | 1200 |

திறப்பு விழாவிற்கு திருவாளர்களான ஈ. வெ. ராமசாமி நாயக்கர், திரு வி. கலியாணசுந்தரமுதலியார், எஸ். ராமநாதன், சனகசங்கர கண்ணப்பர், டாக்டர் வரதராஜுலு நயுடு ஆகியோரை வரவழைப்பதென்று தீர்மானிக்கப் பெற்றிருக்கிறது. காரியதரிசி


உலகப் பிரசித்தி பெற்ற பாரம்பரை வைத்யர்! ஆயிரக்கணக்கான குஷ்ட ரோகிகளை குணமாக்கினவர்!! வைத்ய கான்பரன்ஸ்களில் வைத்திய ஆசிரியர் பட்டமும் தங்க மெடலும் பெற்றவர்!!! சமஸ்தான வைத்திய நிபுணரான பழநி சி. மலையப்பசாமி அவர்களின் மருந்துகள் உலகமெங்கும் புகழ் பெற்றவை உண்மையான குணமுள்ளவை. உள்ளூர் வாசிகளால் மதிக்கப் பெற்றவை. ஒரு முறை வாங்கி பரீக்ஷித்தால் உண்மை விளங்கும்,



நூதன சிங்கபலத்தை தருவது எது? பழனி, சி. எம். சாமி,

மகா வீரிய தங்கபஸ்பம்.

பச்சிலை மூலிகையினாலேயே நீற்றப்பட்டது. பெரிய மஹானின் முறை. அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்த விர்த்தியும் உண்டாக்கும் இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு, பவுத்திரம், மூலம் க்ஷயம், இருமல் கபக்கட்டு, குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ 10.

நற்சாக்ஷி:—தங்கள் தங்க பஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை, பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாதுபுஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையை எழுத முடியாது. இன்னும் மேற்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. பி. வரதராஜப்பெருமாள் சாமி, கவிராயர், பொள்ளாச்சி.

குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும, நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தனுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ. 15. 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30. ஏராளமான நற்சாட்சிகளை கேட்லாக்கில் பார்க்கலாம். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். பினாங் முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

C. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை, பழனி S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:-முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத் தெரு, ஜி.டி. சென்னை

## ஈரோட்டுக்கு மந்திரி விஜயம்

—:o:—

ஈரோட்டில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் அர்பன் பாங்கி கட்டிடத்தை திறப்பதற்காக, சென்னை மகாண வளர்ச்சித்துறை மந்திரிகனம் பி. ரங்கநாதமுதலியார் பிப்ரவரி 10உ ஈரோட்டுக்கு விஜயம் செய்திருந்தார்.

அன்று காலை 7 மணிக்கு ஷை பாங்கியின் நிர்வாகஸ்தர்கள் அவரை எதிர்கொண்டழைத்துவந்து புகைப்படமெடுத்து பாங்கிக் கட்டிடத்திற்கு வாத்தியத்துடன் அழைத்துவந்து அவருக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள். பின்னர், கனம் மந்திரியவர்கள் கட்டிடத் திறப்பு விழாவை நிகழ்த்தினர்.

பிறகு குவாபரேடிவ் யூனியன் சார்பாக அதன் தலைவர் ஸ்ரீமான் டி சீனிவாச முதலியார் ஒரு வரவேற்புப பத்திரம் வாசித்துக் கொடுத்தார்.

தவிர கனம் மந்திரியவர்கள் கோவாபரேடிவ் அண்டு சேல் சொசைட்டி கட்டிடத்திற்கு மோட்டாரில் அழைத்துச் செல்லப்பட்டு அதன் காரியதரிசி ஸ்ரீமான் எம். எஸ். முத்துக்கருப்பஞ் செட்டியாரவர்களாலும் ஒரு வரவேற்புப்பத்திரம் அளிக்கப்பட்டார்.

மாலை 4 மணிக்கு அர்பன் பாங்கி கட்டிடத்தில் கனம் மந்திரியவர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது. பின்னர் ஈரோடு சாரணர் சங்கத்தாரால் பல விளையாட்டுகள் செய்து காட்டப்பட்டன.

மாலை 6 மணிக்கு கனம் மந்திரிக்கு நகர பரிபாலன சபையார் ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தனர். 6½ மணிக்கு கனம் மந்திரியவர்கள் முனிசிபல் பெண் பாடசாலைக்கு அஸ்திவாரக்கல் நாட்டினர். 7 மணிக்கு முனிசிபல் சிங்கார வனத்திற்கு அழைத்து செல்லப்பட்டார்.

அடுத்த நாள் 11உ பெருந்துறை பவானி மேட்டூர் முதலிய இடங்களுக்குப் போய்விட்டு 12உ மறுபடியும் ஈரோடுவந்து பெண் பாடசாலையில் மாலை 4½ மணிக்கு "குழந்தைகளை வளர்க்கும் முறை" என்பது பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்திவிட்டு 6-30 மணிக்கு மஹாஜன பாடசாலையில் 'பக்தர் வாழ்க்கை' என்பது பற்றி ஒரு உபந்யாசம் செய்துவிட்டு அன்றிரவு திருச்சி ரயிலில் புறப்பட்டு விட்டார். ஒருநிருபர்.

## இடிகரை கலைமகள் வாசக்சாலை,

17—2—28 ம் தேதி திருவாளர் வி தாச நாயுடு அவர்கள் தலைமையில் கூடிய பொது கூட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. திரு. சி எஸ் வெங்கட்டரமண ராவ் ஆர் வி சின்னசாமி நாயுடு தலைவர்களாகவும், திருவாளர்கள் பழனியப்ப பிள்ளை எஸ் டி ரங்கதுரை காரியதரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சங்கத்தால் ஏற்படும் நன்மைகளைப்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. நன்கொடை அளிக்கப்பட்டது. கடைசியாக அக்கிராசனரால் முடிவுரை கூறப்பட்டு தாம்பூலாதிகள் வழங்கப்பட்டு வந்தனோபசாரத்துடன் சபை முடிவுற்றது.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

**மின்சாரரசம்.**

சகல வியாதிகளுக்கும்
தேவாமிர்தம் போன்றது.

பத்தியமில்லை! அநுபானமில்லை!

S. T. ஆதியந்தன் B. A.
ஆர்டிஸ்ட்,
சென்னை:-

எனக்கு 2 வாரமாக மேகுவலியுடன் வயிற்றுப்போக்கு தொந்திரவு பண்ணிக் கொண்டிருந்தது. ஒரு தடவை மின்சாரரசம் சாப்பிட்டதில்கடும்வலியை உடனே நிறுத்தியது பின்னும் 2 நாள்தொடர்ந்து சாப்பிட்டதில் ஷை நோய் இருந்தவிடம் தெரியாமல் போய்விட்டது

A. G. முத்தையா B. A.
தாசில்தார்,
கோவில்பட்டி:-

இந்த ஔஷதம் ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. டாக்டர்களுக்கு செலவிடும் பணத்தை இது மீதிசெய்துவிடும். எல்லா வியாதிகளுக்கும் மின்சாரரசம் தேவாமிர்தம் போன்றதென்னும் பெயர் இந்த மருந்துக்கே தகும்.

துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக்
கணக்கில் ஆச்சரியகரமாக
குணமடையலாம்.

சிறு குழந்தைகள் முதல் சகல வயதினரும்
உபயோகிக்கலாம்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள். நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.
கணக்கற்ற நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றது.
புட்டி 1-க்கு ரூ 2. தபாற் செலவு வேறு.
எல்லா ஊர்களிலும் கிடைக்கும். கேட்டாக் இஞம்.
விலாசம்:- மின்சாரரசம் கம்பெனி (லிட்.) சேலம்

நலம்! நயம்!! நம்பிக்கை!!!

இம்மூன்றும் ஒருங்கே கிடைக்கும்.

**நூதன நகை வியாபாரிகள்,**

மெஸ்ஸர்ஸ். எட்வர்டு அண்டு கோ,
நவீன நகை வர்த்தகசாலை,
178, 179, சைனாபஜார் ரோட், சென்னை, G. T.

எவ்விதமான பொன், வெள்ளி நகைகளும், வைரக்கல் கட்டட வேலைகளும், கைதேர்ந்த வேலையாட்களையும், மேநாட்டு நூதன மெஷின்களைக் கொண்டும் மிக உறுதியாயும், அபூர்வ வேலைப்பாட்டுடனும், குறிப்பிட்ட கால அளவில் செய்து கொடுக்கப்படும்.

உடனே ஒருமுறை பரிட்சை செய்து பார்த்து பலனடையுங்கள்.

T. V. சுப்பிரமணியம், மானேஜிங் டைரக்டர்.

**சிருங்காரமான போட்டோ படங்கள்.**

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் விநோத நடை உடை பாவனைகளையும் விளக்கும் பொட்டோ கார்டுகள் படுக்கையறையைச்சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் கிளேஸ் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

ப்ரேஞ்சு வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய ஷை கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

தி: கிருஷ்ண ஏஜன்சி,
26, வெள்ளாளத் தெரு, புரசபாகதம், மதராஸ்

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

நான் சொல்லுவது எட்டிலிருக்குறது அவர் பிறந்த இடத்தில் குரு சிஷ்ய பரம்பரை கதையாகவுமிருக்கிறது. சங்கரரின் தாயார் விதவை. அந்தம்மாள் கோவிலுக்குப்போய்க்கொண்டு வந்தார்கள், அதனால் கெர்ப்பமடைந்தார்கள். அன்று முதற்கொண்டே பந்துக்கள் அவரை ஜாதியைவிட்டுத் தள்ளி விட்டார்கள். சங்கருக்கு உபநயனம் செய்ய தாயார் ஏற்படுத்தினதற்கு யாரும் வரவில்லை. உபநயனம் ஆகாமலே சந்நியாசத்தை சங்கரர் அடைந்தார். பிரமச்சரிய விரதத்தை அவர் அனுஷ்டிக்காமல் சன்னியாசமடைந்ததிலிருந்தும் அதற்குப் பின்னும் எழுதும் சாஸ்திரங்களிலெல்லாம் ஆசிரமங்களை வரிசை கிரமாக அடையவேண்டியதில்லை என்று வேதத்திலிருப்பதாகவும் சாஸ்திரிகள் எழுதுகிறார்கள். தாயார் இறந்து போனதற்கு பந்துக்கள் யாரும் வராததினால் சங்கரர் தாமாகவே தாயாரைக்கொண்டுபோய் தகனம் செய்தார் என்றும் தங்கள் ஜாதியார் மேலிருந்த கோபத்தால் மலையாளத்தில் அநேக அனுச்சாரங்களை உண்டு பண்ணினார் என்றும் கதை. அதற்குப்பின் சங்கரர் மலையாளத்திற்குத் திரும்பவேயில்லை. அவருடைய பட்டத்திற்குவந்த சிஷ்யர்களும்மலையாளம் போனதில்லை, பல பாப்பார்களின் யுக்தியால் பணம் சம்பாதிப்பதற்கும் உழைப்பில்லா சோறு சம்பாதிக்கவும் பத்து வருடத்திற்கு முன் காலடியில் ஏற்படுத்தின கும்பாபிஷேகத்திற்கு தான் சங்கருடைய பேரை வகித்தவர் போனார் இப்பொழுது இரண்டு சங்கரர்கள் மலையாளமெல்லாம் சுற்றி மடம் போய்ச் சேர்ந்திருப்பார்கள் சங்கரர் நம்பூதரிப்பாப்பான். அவர் ஜாதியில் பெண்கள் ருதுவான பின்பே கலியாணம் செய்வார்கள். குடும்பத்தில் மூத்தவனுக்கே கலியாணம்கலியாணமே ஆகாமல் பெண்கள் அறுபதுவயதாகி சாவதுமுண்டு, அப்பொழுது அந்தப்பிணத்திற்கு தெர்ப்பையை வைத்தோ மந்திரத்தில் மற்றொரு ஆணை சிருஷ்டித்தோ கலியாணச் சடங்கை நிறைவேற்றுவார்கள், எந்த ஸ்மிருதி இதற்கு பிரமாணமோ நமக்குத் தெரியாது. பாப்பானில் உயர்ந்த பாப்பானாகிய மேற்படி நம்பூதரிக்கு நம் நாட்டுப் பாப்பான் சமயலாளாயிருந்தாலும் நம் தேசத்துப் பார்ப்பானை நம்பூதரிப்பாப்பான் பந்தியில் வைத்து சாப்பிடமாட்டான், நம் பார்ப்பார்கள் சமைத்ததை நம்பூதரிப்பெண்கள் சாப்பிடமாட்டார்கள். பார்ப்பானுக்குச் சங்கராச்சாரி குரு, அவர் ஜாதியில் ருதுவான பெண்களுக்கும் 30, 40 வயதானாலும் கலியாணம் செய்வார்கள். ருதுவான பின் கலியாணம் செய்தால் ஜாதியே கெட்டுப்போகுமென்றும் சாஸ்திர சம்மதமில்லையென்றும் மகா மகோபாத்தியாயர்களும் சமஸ்கிருதபண்டிதர்களும் சொல்லுகிறார்கள். பாப்பார ஜாதியில் உயர்ந்த ஜாதி சங்கரர்ஜாதி. அவரும் பாப்பார குரு. அவர் ஜாதியிலும் அநேகமாக எல்லாரும் பண்டிதர்களே. இவர்கள் சொல்லுவது சரியா? நம்நாட்டுப் பாப்பார்களும் சாஸ்திரிகளும் சொல்லுவது சரியா? இவர்கள் இருவர்களுக்கும் ஸ்மிருதி வேதங்கள் ஒன்றா? இரண்டா? இவர்கள் இருவர்களின் சாஸ்திரங்களில் எது உயர்ந்தது "இதற்கும் சாஸ்திரத்திற்கும் சம்பந்தமில்லை, தேசாச்சாரம்" என்றுசொன்னால் சாஸ்திரபிரமாணமும் அதிலும் ஒத்துவராத மேற் கோள்களும் காட்டி ஜனசமூகங்களை ஏன் பிரமிக்கச் செய்ய வேண்டும்? குருவின் ஜாதிக்கு ஒரு ஆச்சாரமும் ஒரு சாஸ்திரமும் சிஷ்ய ஜாதிக்கு வேறு ஆச்சாரமும் வேறு சாஸ்திரமுமாக இருப்பதும் அப்படிப்பட்ட குரு சிஷ்ய பந்தியை விட்டு விட்டால் சாஸ்திரமும் இரண்டு ஜாதியும் கெட்டுப்போய் விடுவதும் நம் நாடு தவிர வேறு எந்த நாட்டிலும் இல்லை யாவரும் ஒத்துக் கொள்ளவு மாட்டார்கள். சங்கரர் காமசாஸ்திரம் பழக ராஜாவுடைய பெண்ஜாதிகளான பெரிய பெண்ணைத் தேடிப் போனாரே யொழிய ஏழ வயது பெண்ணைத் தேடவில்லையே.

இனி மகாமகோபாத்தியாயரின் சொந்த தெய்வங்களைப்பற்றி கவனிப்போம் சிவபெருமான் எத்தனையோ பெண்களை மோகித்ததாக கதைகளிலிருக்கின்றன. ருதுவாகாத ஒருபெண்ணையவது அதில் காணோம். நடராஜர் பெரிய பெண்ணான காளியிடமே அறுபத்து நான்கு நடனமும் செய்தார். சுந்தரேசர் மீனாட்சிக்கு எல்லா அங்கமும் பூரணப்பட்ட பின்பே விவாகம் செய்து கொள்ளுவோம் என்று சொன்னது மல்லாமல் எல்லா அங்கமும் பூரணப்பட்ட பின்பே விவாகம் செய்துகொண்டார் என்பதை ஒவ்வொருவரும் மதுரையில் பார்க்கிறோம். வள்ளிக்கு ஏழு வயதென்று நாரதர் சுப்பிரமணியரிடம் வருணிக்கவில்லை. வள்ளியின்பத்து வயதைக்கண்டு தெண்டபாணி வாடி வதங்கி கூத்தாடவில்லை. விநாயகர் மடிமீதும் தோள் மீதும் இருக்கும ஐந்து பெண்களும் வயதுவந்தவர்களே, நம் ரிஷிகள் கூட வயது வந்த பெண்ணை கண்டுகலியாணம் பண்ணிக்கொண்டார்களே யல்லாமல் பத்து வயது பெண்ணைக்கட்டி உடனே படுக்கைக்கு விட்டு கெர்ப்பதான மந்திரத்தை எந்த புரோகிதனும் சொன்னதாகக்கதைகளைக் காணோம்.

முந்துங்கள்! முந்துங்கள்!!

# 'இந்திய-மாதா'

மிஸ், காதரைன் மேயோ என்னும் அமெரிக்க மாது தன் இந்திய—சுற்றுப்பிரயாணத்தில் கண்டவைகளையும், கேட்டவைகளையும் கொண்டு பெரும் பிரட்டாக நம்மையும் நம் சகோதரிகளையும் தூஷித்து எழுதியிருக்கும் புரட்டுப் புராண புஸ்தகத்தின் சுத்த மொழி பெயர்ப்பு.

இதை ஒவ்வொரு இந்தியரும் வாசித்து, அயல் நாட்டார் நம்மை எவ்வளவு இழிவுபடுத்தத் தயாராயிருக்கிறார்களென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

21 பெரிய புஸ்தகம்உயர்ந்த பைண்டு.

புஸ்தகத்தின்பேரில் பாரத மாதாவின் படம் கண்ணைக் கவரும்படியாக பல கலர்களில் அச்சிடப் பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் பதிப்பு ரூ. 8—0—0 ஆக விற்கப்படுகிறது. தமிழர்கள் படிக்க வேண்டும் என்ற உத்தேசத்துடன் அசல் விலைக்கே விற்கிறோம். முன்பணம் ரூ. 1—8—0 அனுப்பிப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

விலை ரூ. 1—8—0.

முன்பணம் அனுப்புவோருக்கு தபாற்செலவு இனாம்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
Book-Depot, சென்னை.



ரப்பர் முத்திரைகள்.

தங்களுடைய மேல் விலாசம் உள்பட தினசரி தேதி பதிக்கும் ஸ்டாம்பு ரூ 2-8-0. தனி ஸ்டாம்பு குஷன் உள்பட ரூ 2-0-0. 6 சுவாமிகளின் ஸ்டாம்புகள் ரூ2-8-0வெள்ளி அரக்கு ஸீல் ரூ 2-8-0. பித்தளை அரக்கு ஸீல் ரூ 1-8-0

மேல்கண்ட ஸ்டாம்புகளுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 10x12 பால சுப்பிரமணியர் படம் இனாமாக அனுப்பப்படும்

M. K. SAWMY & CO
Engravers & Rubber Stamp Makers,
Late of Spencer & Co Ltd
Sawmy Naicken Street, Mount Road, P. O. MADRAS

ஆநந்த குணபோதினி.

இரண்டாம் வருடம்.

இதுபோன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000—சந்தாதார்கள்உள்ளது. வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனாம். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

நோட்டீஸ்.

15, 20 வருஷங்கள் சென்ற வெள்ளை, வெட்டை, நீடித்த பிரமேகம், அதிசாரம் வயிற்றுப் போக்கு இவற்றை அதி ஆச்சரியமாகக் குணப்படுத்துகிறோம். நேரிலும் தபால் மூலமாகவும் மருந்து பெற்றுக்கொள்ளலாம், வியாதி விபரத்துடன் ஒரு அணா ஸ்டாம்பு வைத்து எழுதவும். டாக்டர் ஆர், சேஷன் எல், எம், எஸ் (ஹோமியோ கல்கத்தா) ஸ்ரீரங்கம் போஸ்டு, திருச்சி.

9-ம் பதிப்பு! வெளி வந்து விட்டது 9-ம் பதிப்பு!!

## ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)




தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொடுத்ததும், இதைப்போன்ற அநேக புஸ்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும்பொருட்டு அநேகரால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், சிறந்ததும், நற்பெயரையும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாக்ஷிப் பத்திரம் வாங்கப்பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள,

ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும், இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள்.

800 பக்கம் முழு காலிகோ பயிண்டு விலை ரூ. 2—0—0

வி. பி. தபால் செலவு அணா 0—8—0

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்.

## மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷை கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

## "லயன் பிராண்ட் சுத்தமான காப்பித்தூள்"

மெஷின்களினால் தயார்செய்தது. உலகப் பிரசித்திபெற்றது.
மிக உயர்ந்தது. சுகந்த வாசனையுடையது. ருசிகரமானது.

சூபர்பைன் புரூ லயன் காப்பித்தூள் 7 பவுன் டின் 1-க்கு ரூ. 10—4—0.
,, 4 பவுன் டின் 1-க்கு 6—4—0. ,, 1 பவுன் டின் 6-க்கு 10—0—0.

வி. பி. தபால் அண்டு பாக்கிங் சார்ஜ் இனாம்.

எங்களிடம் இன்னும் பல ரகங்கள் ¼, ½, ¾, 1, 2, 4, 7, 14, 28, 56 பவுன் டின்களில் பாக்செய்து மொத்தத்திலும் சில்லரையிலும் விலை சாசமாய் கிடைக்கும். விபரங்களடங்கிய விலை ஜாப்தாவிற்கு உடனே எழுதுங்கள்.

லயன் பிராண்ட் காப்பி மான்யூ பாக்சரிங் கம்பெனி,
கண்ணங் குறிச்சி P. O. (சேலம் ஜில்லா).

## அறிக்கை.

ஜவுளி ஜரிகை வியாபாரிகளுக்கு


எங்களிடம் பிரான்சி 8 லடி ரகமுள்ள ஜரிகை மார்க்குகளும் பாம்பே குவாலிடி 8 லடி ரகசு சரிகை மார்க்குகளும் சூரத்பட்டு கயிர்கட்டின அதிக ரகமுள்ள கம்பி ரகங்கள் மார்க்குகள் தயாரிலிருக்கிறது. இத்துடன் உள்ளூரில் தயாராகும்படியான ஜவுளி தினுசுகளில் வெள்ளை 100 நெம்பர் முதல் 200 நெம்பர் வரை நூல்களில் 5, 6 முழம் சதுரம் ஜரிகை குமால்களும் ஷை நெம்பர்களில் 2½ முழம் அகலம் 6 முழம் பலவிதமான நவீன கொடி பேட் ரகங்களில் ஜரிகை துப்பட்டாக்களும் தனிப்பட்டும், பட்டும் நூலும் கலந்த பலவிதமான இங்கிலீஷ் பேன்ஸி சிகப்பு ரோஸ் கலர்களில் 5 அகலம் 18 முழம் நீளம் பலவிதமான பேட்கரையும் ஜரிகை முந்தாணியுள்ள சேலை ரகங்களும் ஷை கண்ட ரகங்களில் 6 முழம் ரவிக்கை தினுசுகளும் பேட்டா தினுசுகளும் தயாரிலிருப்பதால் தேவையுள்ளவர்கள் எழுதினால் விலை ஜாப்தா அனுப்பப்படும்.

சி. லிங்கி செட்டி எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம், கோயமுத்தூர்.

## டிடக்டாஸ்

அல்லது

## துப்பு இரகசியம் அறியும் கருவி.



இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஷை கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில் அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி., மதராஸ்.

## பெண்களுக்கு அழகு.

உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட், கருப்பு, செம்பு, வகைப் கலர்கள், கெட்டிச்சாயம்: பளபளப்பான வசீகரத் தோற்ற முள்ளது.

18 மு. x 48 இஞ்சு கலர் புடவை ரூ. 4—4—0
ஷை சன்னடி ,, ரூ. 4—12—0
18 மு. x 44 இஞ்சு கலர் புடவை ரூ. 3—8—0
ஷை சன்னடி ,, ரூ. 3—12—0

புதிய ஜவுளி கேடலாக் இனாம்!

Te Madura Oriental Trading Co.,
Laxmi Cloth Store, MADURA.

அநேக காட்சிகளில் பொன், வெள்ளி மெடல்கள் பெற்ற

## விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சு, கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள்:— 20 சாம்பிள் பாக்கெட் ரூ. 2. 10 பாக்கெட் 1—4. நாட்டுக் காய்கறி 20 பாக்கெட் ரூ. 2—8. ச. கொ. இ. காதர்மீரா சாய்பு,
ஹெட்நர்சரி தோட்டம், சேலம்.

## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஷு ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்வொர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

1928 1928

# இந்து சமயக் காலண்டர்.

ஒரே காலண்டரில் அழகான 14 படங்களுள்ளது!
ஒவ்வொரு படமும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும்
தத்துவங்களை விளக்கிக் காட்டுவது.
நேர்த்தியான ஆர்ட் பேப்பரில் கண்ணாடி போடத் தகுந்ததாய்
அச்சிடப்பட்டுள்ளது.

இக்காலண்டரில் அடங்கியுள்ள 14 படங்களின் விவரம்:—

1 திருமகள்
2 கலைமகள்
3 ஆண்டாள் சூடிப்பார்த்தல்
4 உமை சிவலிங்கத்தைத் தழுவியிருத்தல்
5 பார்வதி பரமேஸ்வரன்
6 மகாவிஷ்ணு
7 ஷண்முகம்
8 பாலகிருஷ்ணன்
9 இராதாகிருஷ்ணன்
10 சிவபெருமான் கங்கையைத் தரித்தல்
11 முருகன் சிவபெருமானுக்கு உபதேசித்தல்
12 காளிங்கமர்த்தனம்
13 துருவன் அருள்பெறுதல்
14 ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்

விலை அணா 8. தபாற்கூலி வேறு.

## இம்பீரியல் டிரேடிங் கம்பெனி,

5-5, பைகிராப்ட் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.